பக்கங்கள் 8 விலை சதம் 40

ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 சித்திரை 14 ஜூ. அங். 18 இதழ் 75

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 27-4-78

## கண்ணதாசன் இ. ஆ. பெ. நேற்றுவரவில்லை!

### தலைவர்கள், பொதுமக்கள் ஏமாற்றம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்நாடு ஆஸ்தானகவிஞர் கவியரசு கண்ணதாசனும் முத்தமிழ்க்காவலர் திரு. கி. ஆ. பெ. விஸ்வநாதனும் நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணம் வந்து சேர்வார்கள் என எதிர்பார்த்து விமானநிலையத்துக்குச் சென்று காத்திருந்த எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் மற்றும் பத்திரிகை நிருபர்கள், படம்பிடிப்பாளர்கள் பொதுமக்கள் பலரும் ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டியதாயிற்று.

கவியரசுக்கும் முத்தமிழ்க்காவலருக்கும் இலங்கை வருவதற்கு விசா வழங்கப்பட்டுவிட்டதாகக் கொழும்பிலிருந்து தகவல் கொடுக்கப்பட்டதுடன் அவர்கள் நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணம் வந்துசேருவது நிச்சயம் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

தந்தை செல்வா நினைவு தினக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக இவர்கள் இருவரும் இங்கு வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

# வவுனியா தேர்தல்கால சொற்பொழிவுகளின்

# பொலிஸ் பதிவேடுகளை சமர்ப்பிக்க கோரிக்கை

(அனுராதபுரத்திலிருந்து நமது நிருபர் கா. யோகநாதன்)

(அனுராதபுரம்)

வவுனியாவில் தேர்தற்காலத்தில் நடந்த அரசியல் கூட்டங்களில் நிகழ்த்தப்பட்ட பேச்சுக்களின் பொலிஸ் குறிப்பேடுகள் கமிஷன்முன் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று ஆகஸ்ட் கலவரத்தில் பாதிக்கப்பட்ட தமிழர்கள் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி மார்லட் சன் சோனிக் கமிஷனிடம் நேற்றுக் கேட்டுக்கொண்டார்.

தேர்தல்காலத்தில் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், வவுனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் போன்றவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவுகள் சிங்களவர் - தமிழர் ஐக்கியம் குலைவதற்குக் காரணமாயிருந்தது என்று சாட்சியங்கள் கூறப்பட்டதையடுத்து சட்டத்தரணி கமிஷனிடம் இந்தக்கோரிக்கையை விடுத்தார்.

நேற்று சாட்சியமளித்த தென்னக்கோன் டொன் செனிவிரத்ன என்ற மெக்கானிக் கூறியதாவது.

1977-ம் ஆண்டு ஜூன் மாதம் 3-ம் திகதி வவுனியாவில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி மாநாட்டில் வவுனியா எம். பி. திரு. ரி சிவசிதம்பரம் எல்லைக்காவலனாக நியமிக்கப்பட்டதனை அடுத்து அவர் சிங்களவர் உடைமைகளுடன் அனுராதபுரம் போய் விடவேண்டும் என்று எச்சரிக்கை விடுத்தார். சிங்களவரின் தோலையுரித்து செருப்புத் தைத்துப் போட்டால்தான் எனக்கு நித்திரைவரும் என்று கூட்டணிக் கூட்டத்தில் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசினார். இதனையடுத்து தமிழர்-சிங்களவர் ஐக்கியம் குலைந்தது என்று கூறினார். அவர் மேலும் கூறியதாவது!

### அனுராதபுரம் சென்றுவிட வேண்டும்

நான் வவுனியாவில் மெக்கானிக்காகக் கடமையாற்றி வந்தேன். கடந்த பொதுத்தேர்தல்காலத்தில் வவுனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் வவுனியா தமிழருடைய பிரதேசம் என்றும் இங்குள்ள சிங்களவர் அனைவரும் அனுராதபுரத்திற்குப் போய்விட வேண்டும் என்றும் பேசினார்.

### எல்லைக்காவலன்

1977 ஜூன் மாதம் 3ம் திகதி வவுனியாவில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி மாநாட்டில் அவர் வவுனியாவின் எல்லைக்காவலனாக நியமிக்கப்பட்டார்.

இக்காலகட்டத்தில் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் வவுனியாவில்நடைபெற்ற கூட்டத்தில் "சிங்களவரின் தோலையுரித்து செருப்புத்தைத்துப்போட்டால்தான் எனக்கு நித்திரைவரும். சிங்கள அரசுக்கு அடிபணிய நாம் தயாராக இல்லை. பண்டாரவன்னியன் பரம்பரையில் வந்தவர்கள் நாங்கள். எமக்கு என்று ஒரு நாடுவேண்டும். வவுனியாவை விட்டு சிங்களவர்கள் வெளியேறிவிடவேண்டும்'' என்று பேசினார்.

வவுனியா எம். பி. தான் "எல்லைக்காவலன்" என்று கூறிக்கொண்டார்.

இக்கூட்டத்தில் செட்டிகுளம் தமிழ் கத்தோலிக்க குருவானவர் பேசுகையில் "எமக்கும் யு. என். பி.க்கும் போராட்டமல்ல. சிங்களவருக்கும் எமக்குந்தான் போராட்டம் என்றார்.

இங்கு பேசிய மடப்பள்ளி ஐயரும் இதேவிதமாகத்தான் பேசினார்.

இவர்களது பேச்சுக்களையடுத்து வவுனியாவில் தமிழர்-சிங்களவர் ஒற்றுமை குலைந்தது.

### எம். பியின் வாகனத்தில் எஸ். ஐ. நாதன்

ஒரு தடவை நான் வாகனம் ஒன்றில் பாவற்குளம் சென்ற போது வழியில் பெற்றோல் தீர்ந்துபோய்விட்டது. வழியில் எதிர்ப்பட்ட திரு. ரி. சிவசிதம்பரம் எம்பியின் வாகனத்தை நிறுத்தி பெற்றோல் தருமாறு கேட்டேன். அவர் மறுத்துவிட்டார்.

அந்நேரம் அவரது வாகனத்தில் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் நாதனும் நாதனின் மைத்துனரும் இருந்தனர். அவர்கள் தேர்தல் பிரசாரத்திற்காகப் போய்க் கொண்டிருந்தார்கள்.

### "பெற்றோல் குண்டுகள்"

மேற்குறிப்பிட்ட காலவேலை விருத்தாசலம் என்பவர் சிங்களவர்க்கு எதிராக செயற்பட்டார். அனுமதியின்றி பெற்றோல் கடத்தியது, சாராயம் கூடுதலாக வைத்திருந்தது ஆகிய குற்றச்சாட்டுக்களின்பேரில் அவருக்கு அபராதங்களும் விதிக்கப்பட்டுள்ளது.

அவரது அறையில் இருந்து பெற்றோல் குண்டுகளும் கைப்பற்றப்பட்டிருந்தன.

### பொருள் விற்க மறுப்பு

ஒரு கட்டத்தில் வவுனியாவில் சிங்களவர்களுக்குப் பொருட்கள் விற்கத் தமிழ்க் கடைக்காரர்கள் மறுப்புத் தெரிவித்தனர்.

வவுனியாப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சில்வா தலையிட்டுச் சமாதானம் செய்துவைத்தார்.

பி.பி.சி.யில் பதவிவகிக்கும் நடராஜா என்பவர் தமிழர்கள் தேர்தலின் பின் தாக்கப்படுவதாக வதந்தி பரப்பினார்.

### 'சிங்கள நாய்கள் கொன்றுவிட்டனர்'

சப்-இன்ஸ்பெக்டர் நாதன், கலவர வேளை, அனுராதபுரத்தில் இறந்த தமிழர்களின் சடலங்களைக் கொண்டு

[8-ம் பக்கம் பார்க்க]

தந்தை செல்வா சமாதிக்கு

## கொட்டும் மழையில் தலைவர்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

முதறிஞர் தந்தை செல்வா முதலாண்டு நினைவுதின வழிபாடுகள் நேற்றுக் காலை வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றன.

திட்டமிட்டபடி நினைவாஞ்சலி தந்தை செல்வா நினைவாலய மைதானத்தில் நிகழமுடியாமல் மழை தடுத்தபோதிலும் காலை 7 மணிக்கு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும், யாழ். எம்.பி. திரு யோகேஸ்வரனும் வேறுபலபிரமுகர்களும் கொட்டும் மழையிலும்ந் தந்தை செல்வாவின் சமாதிக்குச் சென்று மலர் தூவி அஞ்சலிசெலுத்தினர்.

வழிபாட்டை அடுத்துச் சமயத் தலைவர்களின் வழிபாடு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. தமிழ் தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்துள்ள காந்தி சமாதானக் கவுன்சில் தலைவர் ஆர். ஆர். திவாகர் இவ்வழிபாட்டு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்.

வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற வழிபாட்டில்

(8-ம் பக்கம் பார்க்க)

கடைசிச் செய்தி

### இன்றைய அஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழக ஆஸ்தானக் கவிஞர் கண்ணதாசனும் முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விஸ்வநாதனும் வருகை தந்தால் மாத்திரமே இன்று யாழ். முற்றவெளி மைதானத்தில் தந்தை செல்வா அஞ்சலிக் கூட்டம் நடைபெறும்.

அவர்கள் வராத பட்சத்தில் இன்றைய கூட்டம் ரத்துச் செய்யப்படும் என்று தெரியவருகின்றது.

முருங்கன் படுகொலை தொடர்பாக

## இளைஞர் பாலஸ்ரீதரன் விசாரிக்கப்பட்டு விடுதலை

(கொழும்பு)

முருங்கனில் நான்கு இரகசியப் பொலிஸார் கொலைசெய்யப்பட்டது தொடர்பாக ரகுபதி பாலஸ்ரீதரன் என்ற இளைஞர் விசாரணைசெய்யப்பட்டார்.

இளைஞர் பேரவையின் கொழும்புக் கிளையின் தலைவராவார் இவர்.

திங்கட்கிழமை இரவு இரகசியப் பொலிஸார் இவரை அவரது வீட்டிலிருந்து கூட்டிச் சென்றதாகவும், வத்தளையில் ஒரு வீட்டில் வைத்து விசாரித்தபின் செவ்வாய்க்

(8ம் பக்கம் பார்க்க)

நாச்சிமார் கோயிலடியில்

## தொ. கூட்டுச்சபை மேதின ஊர்வலம் ஆரம்பமாகும்

(யாழ்ப்பாணம்)

தொழிற்சங்கங்களின் யாழ். மாவட்டக் கூட்டுச்சபை கொண்டாடும் மே தின ஊர்வலம் நாச்சிமார் கோயிலடியிலிருந்து ஆரம்பமாகும்.

அன்று பிற்பகல் 3.30 மணிக்குப் புறப்படும் ஊர்வலம் கே. கே. எஸ். வீதி வழியாகச் சிவலிங்கப்புளியடிச் சந்தியை அடைந்து ஓட்டுமடம் வீதியால் ஓட்டுமடச் சந்தியை அடைந்து, மானிப்பாய் வீதி

(8ம் பக்கத் தொடர்ச்சி)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

இண்டுக்கல் இரும்புப்பெட்டி 3 அடி உயரமுள்ளது. உடன் விற்பனைக்குண்டு விபரங்கட்கு க.சிற்றம்பலம் & சன்ஸ், நெல்லியடி. 9136

நல்ல நிலையிலுள்ள ஒரு இங்கிலிஷ் குளிர்சாதனப் பெட்டி [பிறிஜ்] உடனடியாக விற்பனைக்குண்டு. பிளோரன்ஸ் ஐந்து சந்தி, யாழ்ப்பாணம். 9125

### தேவை

பிஸ்கட் வெட்டுவதிலும் பக்கட்டில் அடைப்பதிலும் அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் உடன் நேரில் வரவும். நியூ பாரத் பேக்கவுஸ், 86, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 9137

பருத்தித்துறை தேர்தல் தொகுதியில் ஜனதா ஸ்பெஷல் பீடி சுற்றுவதில் அனுபவம் உள்ள பெண் தொழிலாளர் தேவை. கூலி 1000 பீடிக்கு ரூபா 7-50. மேலும் ஜனதா ஸ்பெஷல் பீடிதயாரிக்க பெண் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்கப்படும் ஜனதாஸ்பெஷல்பீடி சுற்றவிரும்புவோரும் பீடி சுற்றப்பழகவிரும்புவோரும் உடன் விண்ணப்பிக்கவும் அல்லது நேரில்வரவும். பவான்ஸ் பீடித் தொழிற்சாலை, சந்திரபவனம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை. 9135

யாழ். நகரிலுள்ள பிரபல வர்த்தக நிறுவனமொன்றிற்கு தகுதியும் அனுபவமுமுள்ள மருந்தாளர் [Pharmacist] தேவை. தகைமைகளுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் 9124 மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 9124

வவுனியாவிலுள்ள வியாபார ஸ்தாபனத்துக்கு பத்து வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுடைய வாள் றைவர் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 9082 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9082

### தேவை

கண்ணாடித் தொழிற்சாலைக்கு வேலை பழகியவர்களும் வேலை பழகுபவர்களும் தேவை. நல்ல சம்பளம் கொடுக்கப்படும. நேரில் வரவும. சேலி கிளாஸ் அன் மெற்றல் வேக்ஸ், நீர்வேலி 8994

## கேள்விப் பத்திரம்

### ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம் ஊர்காவற்றுறை

7000 (ஏழாயிரம்) வெற்றுச் சாக்குகளுக்கு கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது. ரூபா 2/50 செலுத்தி சங்கத்தில் இருந்து பெறப்பட்ட பத்திரத்தில் ''பொது முகாமையாளர், ப. நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறை'' என்னும் விலாசத்திற்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ கேள்விப்பத்திரங்கள் 3-5-78ந் திகதிக்கு முன் அனுப்பிவைக்க வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 2-5-78-ந் திகதி பகல் 12-00 மணிவரைவிநியோகிக்கப்படும் விண்ணப்பதாரர் ரூபா 250/- வைப்புப்பணம் செலுத்தி இருத்தல் வேண்டும்.

பதில்
பொதுமுகாமையாளர்
ஊர்காவற்றுறை.
25-4-78 9183

## மீண்டும் ஆரம்பமாகும்

(உடுப்பிட்டி)

யாழ். இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் மாலைநேர ஒருவருட ஆங்கில சுருக்கெழுத்து - தட்டெழுத்தாளர்களுக்கான தராதரப் பத்திரப் பயிற்சி நெறி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேற்படி பயிற்சி நெறிக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் ஏற்கனவே வர்த்தமானிமூலம் கோரப்பட்டிருந்தும் இப் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படாது இருந்து வந்தது.

இது சம்பந்தமாக யாழ். இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் மன்றம் கல்வியமைச்சரிடம் முறையிட்டதைத் தொடர்ந்து இப்பயிற்சி நெறியை உடனடியாக ஆரம்பிக்கும்படி கல்வியமைச்சு தொழில் நுட்பக் கல்லூரி நிர்வாகத்திற்கு உத்தரவிட்டுள்ளது. (உ)

# யாழ்ப்பாண வாலிப மாநாடு வரலாறு நூல் வெளிவரும்

(யாழ்ப்பாணம்)

'இலங்கைக்கு சிறப்பாக யாழ்ப்பாணத்துக்கு அமரர் ஹண்டி பேரின்பநாயகம் செய்திருக்கும் தொண்டுகளை அளவிட முடியாது. இலங்கைத் தீவுக்குக் காந்தி மகானையும், நேருஜியையும் வருவிப்பதற்கு மூலகாரணமாயிருந்தவர் அமரர் ஹண்டியாவர். நாட்டுக்குப் பூரண சுதந்திரம் வேண்டுமென்று கர்ச்சித்தெழுந்தவர். யாழ்ப்பாண வாலிப மகாநாட்டிற்குச் சிற்பியாக அமைந்தவர். அவருடைய அந்தியகாலத்தில் தாம் உருவாக்கிய வாலிப மாநாட்டின் சரித்திரத்தை எழுத வேண்டுமென்ற பெருவிருப்பம் கொண்டிருந்தார். அதனை இச் சபை அவருடைய நாமத்தை இளம்சந்ததியார் புரிந்து கொள்ள வேண்டுமென்றபெருநோக்கம் கொண்ட இச்சபை செய்து முடிக்கும்"

இவ்வாறு ஹண்டி பேரின்பநாயகம் ஞாபகார்த்தசபைத் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் யாழ்ப்பாண வாலிப மாநாட்டைப் பற்றிய நூல் வெளியிடுவது சம்பந்தமாக நடைபெற்ற கூட்டத்திற்கு தலைமை தாங்கித் பேசுகையில் கூறினர்.

"இப்பெரும்பணிக்கு அப் பெரியாரின் பழைய மாணவர்கள், அன்பர்கள், அபிமானிகள் யாவரும் தங்களாலியன்ற பணம் மற்றைய உதவிகள் அனைத்தும் தாராளமாகக் கொடுப்பார்கள் என்பது நிச்சயம்" என்றும் தலைவர் நம்பிக்கை தெரிவித்தார்.

யாழ்ப்பாண வாலிப மாநாட்டின் சரித்திரத்தை வரலாறு வழுவாத மரபில் எழுதி உதவ கொழும்பு வளாக விரிவுரையாளர் திரு. சிலன் கதிர்காமர் முன்வந்துள்ளார். ஹண்டி மாஸ்ரருடன் தொடர்பு கொண்ட எவரும் இப்பணிக்குப் பொருத்தமான தகவல்களை உதவ வேண்டுமென்று சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. அப்பெரியாரின் முதலாம் ஆண்டு விழாவில் இந்நூல் வெளியிடப்பட வேண்டுமென்ற தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேறியது. பின்வரும் உத்தியோகத்தர்கள் சபைக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: சி. சுப்பிரமணியம், உபதலைவர்கள்: கே. ஏ. செல்லையா, பேராசிரியர் ஹூல் ஜெயசிங்கம், செயலாளர்: ந. சபாரத்தினம், வீ. சிவசுப்பிரமணியம், பொருளாளர்: ஏ. எஸ். கனகரத்தினம்.

15 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (அ)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

யாழ்ப்பாணம் சோமசுந்தரம் அவனியூ 3-ம் இலக்கம் ''பெதேனி'' யைச் சேர்ந்த நைறு ஜோர்ஜ் என்பவரின் மரணசாதனம் சம்பந்தப்பட்ட விடயத்தில்
மரண மெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம்
இல. 3341

நைறு ஜோர்ஜ் லைம் பெண் பமீலா ரோசரி பெதேனி 3 சோமசுந்தரம் அவெனியு சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
மனுதார்

எதிர்

1. ஏஞ்சலோ ஜெபரஞ்சன்
2. பேபி ஜெபரஞ்சினி
3. மேர்வின் ஜெபநேசன்
4. நோயல் ஜெபசீலன்

பராயமற்றவர்

5. ஹரிஜெபபிரியன்
எல்லாரும் பராயமற்றவர்கள் தங்கள் பாதுகாவலர் 6-ம் எதிர்வாதி மூலமாக

பாதுகாவலர்: 6. அல்பேட் இளையதம்பி அரசரத்தினம் 3, சோமசுந்தரம் அவெனியு, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதி மன்றத்தில் கொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978-ம் ஆண்டு வைகாசி மாதம் 3-ந் திகதி (3-5-78) முற்பகல் 10 00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன்முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1978-ம் ஆண்டு
சித்திரை மாதம் 25-ந் திகதி.
நீதிமன்றக் கட்டளைப்படி

ஒப்பம்
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

வரைதல்
கந்தையா சற்குணநாதன்,
நாவல் மார்கட்டு,
யாழ்ப்பாணம்,
மனுதாரின் சட்டத்தரணி
9140

## கலைவிழா

(பண்டத்தரிப்பு)

அளவெட்டி இளைஞர் வட்டத்தினர் கலைவிழா ஒன்றை இம்மாதம் 29ம் திகதி சனிக்கிழமை மாலை அளவெட்டி அருணோதயக்கல்லூரி திறந்த வெளியரங்கில் நடாத்தவுள்ளனர்.

"சோ" எழுதிய ''உண்மையே உன் விலை என்ன?'' என்ற நாடகம் உட்பட பல கலை நிகழ்ச்சிகளும், இன்னிசை, பொப்பிசை நிகழ்ச்சிகளும் இக் கலைவிழாவில் இடம்பெறவுள்ளன. (உ)

## நிர்வாகிகள்

(வேலணை)

மிருசுவில் வடக்கு இராம முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்தப்பொதுக்கூட்டம் திரு த. ஐயம்பிள்ளை தலைமையில் நடைபெற்றபோது, பின்வருவோர் நடப்புவருட நிர்வாகிகளாக பின்வருவோர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: கா. பொ. மயில்வாகனம், உபதலைவர்: வே. சின்னையா, செயலாளர்: கு விநாயகம், உபசெயாளர்: ஸ்ரீ பஞ்சலிங்கம், தனாதிகாரி: க. சுப்பிரமணியம், மற்றும் 6 பேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (உ)

## சங்கடம் தரும் வாய்க்கால்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பட்டணசபையினரால் அமைக்கப்பட்டுள்ள கழிவு நீர் செல்லும் சாக்கடை வாய்க்கால் துர்நாற்றம் வீசுவதனுல் இப்பகுதியில் உள்ள கடைக்காரர்களும் மற்றும் பொதுமக்களும் மிகவும் சிரமம் அடைவதாக பலத்த புகார் கூறப்படுகின்றது.

பண்டத்தரிப்பு பிரதான வீதியில் அமைந்துள்ள இந்த சாக்கடைக்கால்வாயில் தண்ணீர் தேங்கி நிற்பதனுல் மலேரியா நுளம்புகள் உற்பத்திாகவும் ஏழியேற்படுமென இப்பகுதி மக்கள் அஞ்சுகின்றனர். (உ)

## மேன்பெர்

தொழில் இலாகா பதிவு இல. 19

ஓமான் சுல்தான் ராஜ்யத்தில் வேலைக்காக 1978 ஏப்ரல் 19 முதல் 21 வரை யாழ்ப்பாணத்தில் நடந்த தொழிற் பரீட்சை, நேர்முகப் பரீட்சைகளில் கலந்து கொண்ட விண்ணப்பதாரர்கள் அனைவருக்கும் ஓர் அறிவித்தல்.

தச்சுத் தொழிலாளர், இரும்பு வளைத்துப் பொருத்துநர், மேசன்கள், வர்ணம் பூசுவோர், ஓரளவு திறமையுள்ள உதவியாளர், கட்டடப்பகுதித் தொழிலாளர், சிவில் பொறியியல் வேலை மேஸ்திரிகள், மேற்பார்வையாளர்கள், உயர் திறமையுள்ள பொறப்பாளர், கனரக கருவி இயக்குநர்கள், தன்னியக்க டீசல், பெற்றோல் இயந்திர இயக்குநர்கள் ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பித்து சோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களுக்கு எழுத்தில் மாத்திரம் தனித்தனி அறிவிப்புகள் அனுப்பப்படும்.

இவ்வருடம் மே மாதம் 15ம் திகதி வாக்கில் அல்லது அதற்கு முன்பதாக மேலதிக விபரங்களை இப் பத்திரிகையில் அவதானிக்கலாம்.

மேன்பெர், பேர்லின் பில்டிங், 54,1/3, காலி வீதி, தெஹிவளை தெற்கு.

34, சுருவில் வீதி, ஊர்காவற்றுறை.

198, யாழ். வீதி, காங்கேசன்துறை.

269, மெயின் வீதி, நீர்கொழும்பு.

1 - A, கைலாசபிள்ளையார் கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

(1978 மே 15ம் திகதியில் இருந்து மாத்திரம்)

9132

## பதவி வெற்றிடம்

பச்சிலைப்பள்ளி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தில் முகாமையாளர் பதவி வெற்றிடத்திற்கு சங்கத்தலைவரால் 10-5-78ற்கு முன்பதாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் என எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் "தலைவர், தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம், பளை என்ற விலாசத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

**சம்பளத்திட்டம்**

$$\frac{250 — 425}{10 \times 1086 \times 12\text{-}50}$$

**வயது**

25 தொடக்கம் 40 வரை (10-5-78ல்)

**பிணை**

1000/- ரூபா ரொக்கப் பிணையுடன் ஆதனப் பிணை 2000/-

**தராதரம்**

- க. பொ. த. (சாதாரணம்) 6 பாடங்கள் இரு தடவைக்கு மேற்படாமல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன் கூட்டுறவு ஊழியர் பயிற்சியில் சாதாரண சான்றிதழ் பெற்றவராய் இருத்தல் வேண்டும்.

- தெங்கு பனம்பொருள் உ. வி. கூ. சங்கத்தில் ஆகக்குறைந்தது 3 வருடம் கடமையாற்றிய அனுபவம் இருத்தல் வேண்டும்.

தலைவர்
பச்சிலைப்பள்ளி தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம், பளை

பளை:
25-4-1978

9139

ஈழநாடு
The Eelanaadu

## டாக்டர்கள் பற்றுக்குறை

நாட்டில் டாக்டர்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நீக்குவதற்கு தற்காலிக ஏற்பாடாக இந்தியாவிலிருந்து நூறு டாக்டர்களை வரவழைப்பதற்கு சுகாதார அமைச்சு ஆலோசனை செய்து வருவதாகவும் இதுசம்பந்தமாக சமீபத்தில் இந்தியாவுக்குச் சென்ற சுகாதார அமைச்சர் இந்திய அரசாங்கத்துடன் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

நாட்டிலுள்ள ஆஸ்பத்திரிகளில் குறிப்பாகக் கிராமப்புற ஆஸ்பத்திரிகளில் பணியாற்றுவதற்கு குறைந்தது அறுநூறு டாக்டர்களாவது தேவை.

நமது நாடு சிறந்த டாக்டர்களை உருவாக்கியிருக்கிறது. இன்னமும் உருவாக்கிக் கொண்டிருக்கிறது. ஆயினும் டாக்டர்களுக்கு இங்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

போதிய ஊதியமில்லாததாலும் முன்னேற்றத்துக்கான வாய்ப்பு அதிகமில்லாததாலும் டாக்டர்கள் பலர் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டனர். பொதுமக்களின் பணத்தில் படித்துப் பட்டம் பெற்றபின் அந்த மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமையைப் புறக்கணித்து தமது சுயநலத்துக்காக டாக்டர்கள் வெளியே செல்வது நியாயமில்லை என்பது உண்மையே.

மற்றும் பல டாக்டர்கள் அரசாங்க சேவையிலிருந்து விலகி அல்லது ஓய்வுபெற்று தனிப்பட்ட முறையில் வைத்தியம் செய்கின்றனர்.

அரசாங்க சேவையில் போதிய ஊதியம் கிடைக்காததும் முன்னேற்றத்துக்கான வாய்ப்பில்லாததுமே இவற்றுக்குக் காரணமாகும்.

டாக்டர்களுக்கு நல்ல ஊதியம் வழங்கவும் ஆராய்ச்சித் துறையில் அவர்கள் மேலும் மேலும் ஈடுபடுவதற்கு வாய்ப்பளிக்கவும் அரசாங்கம் தகுந்த ஏற்பாடுகளைச் செய்தால் அரசாங்க சேவையிலிருந்து டாக்டர்கள் விலகிச் செல்லாமல் தடுக்கமுடியும்.

டாக்டர்கள் பற்றுக்குறை ஒருபுறமிருக்க நமது நாட்டில் மருந்துகளுக்குள்ள தட்டுப்பாடும் மோசமானது.

மருந்துகளில்லாமல் டாக்டர்கள் எத்தனைபேரிருந்தும் என்ன பயன்? மருந்துத் தட்டுப்பாட்டை நீக்குவதற்குச் சுகாதார அமைச்சு உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஆஸ்பத்திரிகளுக்கு விநியோகிக்கப்படும் மருந்துகள் தனியார் மருந்துக் கடைகளுக்குள் நுழைந்துவிடுவதாகப் பொதுவாகப் புகார் கூறப்படுவதுண்டு. இதுபற்றியும் சுகாதார அமைச்சு கவனம் செலுத்துவது அவசியம்.

டாக்டர்கள் பற்றுக்குறை மருந்துத் தட்டுப்பாடு ஆகிய பிரச்சினைகளைவிட ஆஸ்பத்திரிகளில் சுத்தமும் சுகாதாரமும் பேணப்பட வேண்டியது மிகமிக அவசியமாகும்.

கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சில வார்டுகளைத் தனியார் நிறுவனங்கள் பராமரிக்க முன்வந்திருப்பதாக சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. இதேமாதிரி யாழ்ப்பாணம் மற்றுமிடங்களிலுள்ள ஆஸ்பத்திரிகளிலும் நல்லமனம் படைத்த தனியார் முன்வருவது பெரும் சேவையாகும்.

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியிலுள்ள சில 'வார்டு'கள் மிக மோசமான நிலையிலுள்ளன. கடும் நோயாளர் கூட யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் தங்கிச் சிகிச்சை பெறுவதற்கு அஞ்சுகின்றனர்.

சில வருடங்களுக்கு முன்னர் நல்ல நிலையிலிருந்த யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி இன்று ஏன் இந்த அவல நிலைக்கு வந்தது? இதற்கு ஆஸ்பத்திரி நிர்வாகம்தான் பொறுப்பேற்க வேண்டும்.

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியின் நிலையை சுகாதார அமைச்சர் நேரில் பார்த்து உடன் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசரமும் அவசியமுமாகும்.

# வவனியா அரசாங்க அதிபர் சிவஞானம் சிங்கள அகதிகளுக்கு கஞ்சிகூட குடிக்கக் கொடுக்கவில்லை

## குறுக்கு விசாரணையில் அப்புகாமி

(அனுராதபுரம்)

வவனியா அரசாங்க அதிபர் திரு சிவஞானம், சிங்கள மக்களைப் பாகுபாடாக நடத்தினார். தமிழ்-சிங்கள அகதிகள் வவனியாவிற்கு வந்ததும், தமிழ் அகதிகளுக்கு சகல வசதிகளும் செய்துகொடுத்தார். சிங்கள அகதிகளைத் திரும்பியும் பார்க்கவில்லை. கஞ்சிகூட கொடுக்கவில்லை. இவர் நடத்தைபற்றி அமைச்சர் ஹேருள்ளேக்கு நேரில் புகார் செய்தேன்.

சன்சோனிக்கமிஷன் முன் சாட்சியமளித்த மாமடுவ முன்னாள் கிராமசபைத்தலைவர் திரு. எல். அப்புஹாமி, சிரேஷ்ட அரச சட்டத்தரணி ஏ. டி. சி. எம். தென்னக்கோனின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

அரச சட்டத்தரணியின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அவர் மேலும் கூறியதாவது:-

ஒவ்வொரு விஷயத்திலும் அவர் சிங்களவருக்கு மாறாக நடந்துகொண்டார். காணி பங்கீடு, துவக்கு லைசென்ஸ் எல்லா விஷயத்திலும் மாறாக நடந்தார். 10 வீதமான நிரந்தர சிங்கள வாசிகளுக்குக்கூட துவக்கு லைசென்ஸ் வழங்கவில்லை.

மாமடுவவில் தமிழ் மக்கள், நீண்டகாலமாகச் சகோதரர்களாக வாழ்ந்துவந்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களின் பேச்சுக்கள், அறிக்கைகள் இவ்விதமான ஒற்றுமையைக் கெடுத்தது.

### கூட்டணியினரின் பேச்சுக்களால் பீதி

கூட்டணியினரின் பேச்சுக்களால் சிங்கள மக்கள் பீதியடைந்திருந்தனர். சில தமிழர் தங்கள் வீடுகளுக்குத் தாங்களே நெருப்பு வைத்தார்கள்.

கமிஷனர்: நீர் பார்த்தீரா? கேள்விப்பட்டேன். பின் சிங்களவர் எரித்ததாக வதந்தி பரப்பினார்கள். உதவி தபால் அதிபர் ஒருவர் தனக்கு 3 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டதாக கூறினார். ஆனால் அவர் வீடு தாக்கப்படு முன்னரே சாமான்களையெல்லாம் அப்புறப் படுத்திவிட்டார்.

மாமடுவ சுப்பிரமணியம் வீடு எரிந்தது, அவர் தன் வீட்டிற்கு நெருப்பு வைத்ததை நான் காணவில்லை. அவர் வீடு எரிந்ததைக் கண்டேன்.

மடுகந்தையில் 10 தமிழர் வீடுகள் இருந்தது; எல்லாம் எரிந்துவிட்டன. (இ)

## இசை விழா இன்றையநிகழ்ச்சி

(அரியாலை)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் யாழ். அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின் 20 வது ஆண்டு இசை விழாவின் ஏழாம் நாள் நிகழ்ச்சியாக இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்துகொள்வோர் வருமாறு:-

மாலை 5-45 மணிக்கு அண்ணாமலை இசைக் கல்லூரி மாணவ மாணவிகளின் பாட்டும், மிருதங்கமும் நடைபெறும். 6-15 மணிக்கு செல்வி ஜெயராணி இராசலிங்கமும், செல்வி வாசுகி இராசலிங்கமும் பாடுகிறார்கள், செல்வி பாக்கியலட்சுமி நடராசா வயலினும், திரு. என். மகேந்திரன் மிருதங்கமும் வாசிக்கிறார்கள். இரவு 7 15 மணிக்கு திரு. ப. முத்துக்குமாரசாமிசர்மா பாட திரு. எஸ். வெங்கடேஸ்வரசர்மா வயலினும், திரு எஸ். பிரணவநாதன் மிருதங்கமும் வாசிக்கிறார்கள். 8-15 மணிக்கு திரு. வி. நடேசன் பாட திரு. எஸ். வெங்கடேஸ்வரசர்மா வயலினும், திரு. ரி. பாக்கியநாதன் மிருதங்கமும் வாசிக்கிறார்கள்.

### மணிவாக்கு

வெற்றி என்பது குறிக்கோள் அன்று. அது ஒரு பயணமே.

—ஆர்தர் ஹேவுட்

### புங்கங்குளம் ரயில் நிலையத்தில்

# ரயிலை தாக்கப்போவதாக தமிழ்நண்பர்கள் கூறினர்

## ஜெயசிங்கா மெண்டிஸ் சாட்சியம்

(அனுராதபுரம்)

புங்கங்குளம் ரயில் நிலையத்தில் கொழும்புக்குச் சென்ற ரயிலைத் தாக்க பல இளைஞர்கள் அங்கு கூடிநின்றனர். அங்கு ரயிலைத் தாக்கவேண்டாமென நூற்றுக்கு மேற்பட்டோர் இளைஞர்களைத் தடுத்துக் கொண்டிருந்தனர்.

இதற்கு முன்னர் தமிழ் இளைஞர்கள் ரயிலைத் தாக்கப் போகிறார்கள் என எனது இரண்டு தமிழ் நண்பர்கள் வந்து என்னிடம் கூறினார்கள்.

இவ்வாறு சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளித்த கொறலவாவைச் சேர்ந்தவரும் கலவரம் இடம்பெற்றபோது புங்கங்குளம் ரயில் நிலையத்திற்குச் சமீபத்தில் வசித்தவருமான ஜெயசிங்கா மெண்டிஸ் கூறினார்.

சட்டத்தரணிகள் குறுக்கு விசாரணை செய்தபோது ஜெயசிங்கா மெண்டிஸ் மேலும் கூறியதாவது:-

சட். பாரிலட்: உமது வீடு ரயில்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரம்? அரைமைல்.

சட்: ரயில் வருமுன், தாக்குதல் பற்றி அறிந்தீர்?-ஆம்.

சட்: 300 தமிழர் பிளாட்பாரத்தில் கூடி நின்றதாக சொன்னீர்? பிளாட்பாரத்தில்லல. ரயில் நிலையத்திற்கு முன்னால் நின்றனர்.

### 50 பேர் கல் வைத்திருந்தனர்

சட்: ரயில் வருமுன் தண்டவாளத்தில் டயர் எரிக்கப்பட்டது? ரயில் வந்தபின்.

சட்: சிற்றுண்டிச்சாலை சிங்கள ஊழியரை இக்கூட்டத்தினர் தாக்கியதாகக் கூறினீர்? ஆம்.

சட்: எப்படி? கையால் தாக்கப்பட்டனர்.

சட்: சிற்றுண்டிச்சாலை ஊழியர் பின் 'கார்ட்'டை சந்தித்தனர்? எனக்குத் தெரியாது.

சட்: எத்தனை ஊழியர் நின்றனர்? 8 பேருக்கு அடித்ததாக இளைஞர்கள் வந்து சொன்னார்கள்

சட்: நீர் அடித்ததைக் கண்டீரா? ஆம் எத்தனைபேருக்கு அடி விழுந்ததென்பதைக்காணவில்லை.

சட் பாரிலட்: சிற்றுண்டி ஊழியர் எவரும் தாக்கப்படவில்லையென்று கார்ட், ரயில் நிலைமை இலாகாவிற்கு அளித்ததாக ஆரம்பத்தில் சாட்சியம் கூறியுள்ளார் என்பதை கமிஷனர் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

சட்; ஊழியர் தாக்கப்பட்டதாக நீர் கூறியது பொய்? உண்மை.

சட்: ரயில் தாக்கப்படுவதாக அறிந்ததும் ஏன் பொலிசுக்கு அறிவிக்கவில்லை? பொலிசுக்கு போக நேரமில்லை.

சட். விக்கிரமசிங்கா: 6-30 மணிக்குத்தான் ரயில் தாக்குவது பற்றி அவருக்கு தகவல் கிடைத்தது.

சட். பாரிலட்: 7-15க்குதான் புங்கங்குளத்திற்கு மெயில் ரயில் வந்தது. ரயில் நிலைய அதிபருக்கு ஏன்சொல்லவில்லை? நான் அப்படி நினைக்கவில்லை.

சட்: பாரிலட்: சாட்சியம் கொடுக்க வேண்டும். என முதலே தெரியும். அதனால் தான் ரயில் நிலையத்தில் போய் நின்றீர்? ஆம்.

கமிஷனர்: யார் சொன்னது? எனது நண்பர்கள்.

கமிஷனர்: என்ன சொன்னார்கள்? ரயிலை தாக்க சிலர் திட்டமிட்டிருப்பதாக கூறினார்கள்.

சட்: நண்பர்கள் பெயர் என்ன? கருணாகரன் மற்றது கமலேந்திரன்.

### தமிழ் நண்பர்கள் தாக்குதல் பற்றிக் கூறினர்

கமிஷனர்: தமிழ் நண்பர்களா? ஆம்

கமிஷனர்: தமிழ் நண்பர்கள் ரயில் தாக்கப்போவதாக உமக்குச் சொன்னார்கள்? ஆம்.

கமிஷனர்: பிரயாணிகளை தாக்கப் போவதாகச் சொல்லவில்லை? இல்லை.

கமிஷனர்: ரயில் வந்தபின் டயரைப் போட்டு எரித்தார்கள்? டயர் எரிந்ததை தூரத்தில் நின்று கண்டேன்.

சட். பாரிலட்: கருணாகரன், கமலேந்திரனை தெரியுமா? ஆம்

சட்: எங்கு வசிப்பவர்கள்? கச்சேரிக்கு அருகில்.

சட்: ஒரேவீட்டில் வசிப்பவர்களா? வெவ்வேறு வீட்டில்.

சட்: ரயில் தாக்குதல் நடந்தபின் பொலிசாருக்கோ, ரயில் நிலைய அதிபருக்கோ கருணாகரன், கமலேந்திரனுக்கு சம்பவம் பற்றி தெரியும் என்று சொன்னீரா? இல்லை

சட்: ஏன்? நான் யோசிக்கவில்லை. முதலில் நான் நம்பவில்லை.

சட்: ரயில்நிலையத்தில் கருணாகரன் கமலேந்திரனை கண்டீரா? அவர்கள் வீட்டுக்குச் சென்றுவிட்டனர்.

சட்: 300 பேரை அங்கு கண்டீர்? ஆம், ரோட்டில் நின்றனர்.

சட்: அது ஒரு வழக்கமான கூட்டமல்ல? இல்லை, ரயிலைத் தாக்கும் திட்டத்திற்கு பலர் எதிர்ப்பு காட்டிக்கொண்டிருந்தார்கள். 100 பேர்வரை ரயிலை தாக்கவேண்டாமென இளைஞர்களைத் தடுத்துக்கொண்டிருந்தனர்.

சட்: 100 பேரையும் உமக்கு தெரியுமா? பெரும்பாலானவரைத் தெரியும்.

சட்: ஏன் இதனை பொலிசுக்கு சொல்லவில்லை? பயத்தினால்.

கமிஷனர்: பொலிசுக்கு சொல்லவில்லையா? இல்லை, பொலிசுக்கு சொன்னால் தமிழர் என்னை தாக்குவார்கள் எனப் பயந்தேன்.

சட்: அப்படியானால் கருணாகரன், கமலேந்திரன் பற்றி இங்கு சொல்லியிருக்கிறீரே? அவர்கள்பற்றி பயமில்லை.

சட்: கமிஷனருக்கு சம்பவம் பற்றி விண்ணப்பம் கொடுத்தீரா? ஆம்.

சட்: யாரிடம்? யாரிடம் கொடுத்ததென தெரியாது.

சட்: சம்பவத்திற்குப் பின் முதன் முதலில் யாருக்குச் சொன்னீர்? இப்பதான் சொல்கிறேன்.

சட். விக்கிரமசிங்கா: சம்பவத்தின்பின் புங்கங்குளத்தை விட்டு எப்ப வெளியேறினீர்? ஆகஸ்ட் 18 ல்.

சட். அங்கு பாதுகாப்பு இல்லாததினால் வெளியேறினீர்? ஆம்.

சட்: இந்தச் சம்பவத்தைப் பார்த்தபின் தமிழ்ப்பகுதியை விட்டு சிங்களப்பகுதிக்குச் செல்வது நல்லது என நினைத்தீர்? ஆம்.

சட்: நீர் உமது சட்டத்தரணியுடன்கூட சாட்சியமளிக்கு முன் ஆலோசனை செய்யவில்லை? இல்லை.

# சிங்கள கூட்டத்தினர் கொள்ளையடித்த பொருட்களை துப்பாக்கி முனையில் பறித்த பொலிசார் தாமே கொண்டுசென்றனர்

## கெக்கிராவை கருணைமூர்த்தி சாட்சியம்

(அனுராதபுரம்)

அகதிகளான எங்களை அனுராதபுரத்திலிருந்து வவுனியாவுக்கு அனுப்ப ஏற்பாடு செய்து எமக்குப் பாதுகாப்புத் தருமாறு ஏ. எஸ். பி சுமணசேகராவிடம் கேட்டேன். அதற்கு அவர் 'உங்கள் ஆட்கள் யாழ்ப்பாணத்தில் எங்களுக்குச் செய்ததென்ன என்பதும் உங்களுக்கு நாம் இப்போது என்ன செய்யவேண்டும் என்பதும் எமக்குத் தெரியும் என்றார்.

கெக்கிராவையில் எனது கடையைக் கொள்ளையடித்த கொள்ளையர்கள் அங்கிருந்து பொருட்களை எடுத்துச் சென்றபோது, வழியில் நின்ற பொலிசார் துப்பாக்கியைக் காட்டிச் சாமான்களை விட்டுவிட்டுப் போகச் சொன்னார்கள். பின் பொலிசாரே அந்தச் சாமான்களை எடுத்துச் சென்றனர்.

இவ்வாறு 'கெக்கிராவை வியாபாரி இளையதம்பி கருணைமூர்த்தி சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

கெக்கிராவையில் நான் இருக்கடை வியாபாரம் செய்தேன் கெக்கிராவையில் 50 வருடங்களுக்கு முன் எனது பெரிய தகப்பனார் வியாபாரத்தை ஆரம்பித்தார்.

அனுராதபுரத்தில் குழப்பம் என்று தர்மதாச என்பவர் ஆகஸ்ட் 17ம் தேதி கூறினார். கடையைப் பூட்டிவிட்டு கடைக்குள் இருக்கும்படியும் கூறினார். அன்று மாலை வெளியிடங்களிலிருந்துவரும் குண்டர் கூட்டம், கடைகளைத் தாக்க வருவதாக அறிந்தேன் அந்தக் கூட்டம் சிங்கள ஆட்கள். அவர்களைக் கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்றார்கள். கூட்டம் கெக்கிராவைவருமுன். மருதங்கடவையில் பொலிசார் மடக்கிப் பிடித்தனர். இரவு 6 மணிக்கு 2 தமிழ் பொலிசார் வந்தனர். அனுராதபுரத்தில் கைது செய்தவர்களை விட்டுவிட்டார்கள் எனத் தகவல் கிடைப்பதாகவும், என்னைக் கவனமாக இருக்கும்படியும் பொலிசார் கூறினார்கள். யார் அந்த கட்டளை பிறப்பித்ததென்று தெரியவில்லை.

இரவு 8 மணிக்கு சார்ஜன்ட் எதிரிசிங்க வந்து ஊரடங்குச் சட்டம் போடப்படுவதால் பயப்படவேண்டாம் என்று கூறினார். அதிகாலை வெடிச் சத்தம் கேட்டது நான் பின் கதவால் மலைப் பக்கம் போனேன் மலையிலிருந்து பின் சந்தியில் நடப்பதைப் பார்த்தேன் முன்பக்கம் எரிந்துகொண்டிருந்தது. பின்பக்கத்தால் கொள்ளையடித்துச் சென்றனர் அப்போது பொலிசார் யூனிபோமுடன் அங்கு நின்றார்கள். அவர்களை எனக்கு அடையாளம் தெரியாது மலையிலிருந்து இறங்கி எனக்குத் தெரிந்த ஒருவர் வீட்டிற்குச் சென்றேன் வீட்டிக்குள்ளிருந்து ஜன்னலால் பார்த்தேன். சாமான்களை கூட்டத்தினர் எடுத்துச் சென்றபோது வழியில் நின்ற பொலிசார் துப்பாக்கியைக் காட்டி, சாமான்களை விட்டுவிட்டுப் போகச் சொன்னார்கள். பின் பொலிசார் அந்தச் சாமான்களை எடுத்துச் சென்றனர்.

### பயத்தினால் புகார் செய்யவில்லை

கமிஷனர்: நீர் ஏன் அந்த பொலிசாரிடம் போய் புகார் செய்யவில்லை? பயத்தினால். பின்தான் பொலிஸ் நிலையம் சென்றேன். தமிழ் அகதிகள் பல இடங்களில் இருப்பதாக அறிந்தேன். நான் பொலிஸ் நிலையத்திலிருக்கும் போது கொள்ளையடித்த சாமான்களை குண்டர்கள் எடுத்துச் சென்றனர். பொலிசார் பார்த்துக் கொண்டிருந்தனர். 58 ம் ஆண்டு தமிழ் அகதிகள் அனுராதபுரத்தில் தாக்கப்பட்டதால், எங்களை வவுனியாவிற்கு அனுப்பச் சொன்னேன். அங்கு ஏ. எஸ் பி. சுமணசேகரா இருந்தார். விருந்தையில் இருந்தபோது அவருடன் கதைத்து பாதுகாப்புத் தருமாறு சொன்னேன்.

உங்கள் ஆட்கள் யாழ்ப்பாணத்தில் எங்களுக்குச் செய்ததென்னதென்பது எனக்குத் தெரியும். செய்யவேண்டியது எனக்குத் தெரியும் என்றார் அவர். அனுராதபுரத்திற்கு பொலிஸ் பாதுகாப்புடன் லொறியில் சென்றபோது மருதங்கடவையில், லொறி நிறுத்தப்பட்டது. பஸ்ஸில் வந்தவர்கள் எங்களைத் தாக்கினார்கள். என் கடையில் வேலை செய்தவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர். பின் சார்ஜன்ட் தலையிட்டு. சுட முயன்றபோது கூட்டம் கலைந்தது. பின் அங்கிருந்து யாழ்ப்பாணம் சென்றேன்.

### 10 லட்சம் நஷ்டம்

கட்டிடம் எங்களுக்குச் சொந்தம். அந்தக் கட்டடத்தில் வேறு சிலரும் வாடகைக்கு இருக்கிறார்கள். தமிழ்க் கடைகள் எல்லாம் எரிக்கப்பட்டுவிட்டன. 5 தமிழர் கெக்கிராவை போய் கடைகளை ஆரம்பித்திருக்கின்றனர். பெரிய வியாபாரிகள் செல்லவில்லை. எனக்கு மொத்த நஷ்டம் 10 லட்சமாகும்.

### அரிசி ஆலை நாசம்

அனுராதபுரம் பழைய நகரைச் சேர்ந்த முருகேசு கனகரத்தினம் கூறியதாவது:

64ம் ஆண்டுமுதல் அனுராதபுரத்தில் இருக்கிறேன். என் சொந்த இடம் நல்லூர், இனக் கலவரம் ஞாபகமிருக்கு. அந்த நேரம் நான் யாழ்ப்பாணத்தில் இருந்தேன். அரிசி மில் பாதிக்கப்பட்டது. நான் சேதம் விளைவிக்கும் நேரத்தில் அனுராதபுரத்தில் இல்லை. ஆகஸ்ட் 18ம் திகதி அரிசி ஆலையில் நடந்த சம்பவம் ஒன்றும் எனக்குத் தெரியாது. 30 ஆட்கள் என் மில்லுக்கு வந்து தாக்கியதாக எனது விண்ணப்பத்தில் கூறியது நான் பார்த்த சம்பவமல்ல. மற்ற இருவர் மட்டும் சம்பவம்பற்றி சொன்னார்கள். ஒருவர் இங்கு இருக்கிறார் மற்றவர் யாழ்ப்பாணம் போய் விட்டார்.

செப்டம்பர் 17ம்திகதி அனுராதபுரம் வந்தேன். என் அரிசி ஆலை எல்லாம் எரிந்து இருந்தது. கொள்ளையடிக்கப்பட்டிருந்தது. அரசாங்க அதிபருக்கு புகார் செய்தேன். அவர் மில்லை வந்து பார்த்தார். மனேஜர் இராணுவத்தினரின் உதவியுடன் யாழ்ப்பாணம் போய்ச் சேர்ந்தார்

சட்: பாரிய சம்பவம்பற்றி அனுராதபுரம் எம். பி க்கும் பிரதமருக்கும் பொலிசார் கடிதம் எழுதினர்? ஆம். இது வரை நடவடிக்கை எடுக்கப் படவில்லை. (ச-இ)

# இரகசிய சாட்சியமளிக்க விரும்பிய சிங்கள ஆசிரியர்

## தமிழ்ப் பகுதிகளில் பணிபுரியவேண்டுமாம்

(அனுராதபுரம்)

அனுராதபுரத்தில் சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளிக்க அழைக்கப்பட்ட சிங்கள ஆசிரியர் ஒருவர் தாம் தமிழ்ப் பகுதிகளிலும் கடமையாற்றவேண்டி இருப்பதால் தமது பெயர் பத்திரிகைகளில் வெளிவரக்கூடாது என்று தாம் விரும்புவதாகவும் தன்னை இரகசியமாகச் சாட்சியமளிக்க அனுமதிக்கும்படியும் கமிஷனரிடம் கேட்டுக்கொண்டார்.

இதை அடுத்து அவரை பின்னர் ஒரு முறை சாட்சியமளிக்க அழைப்பதாக கமிஷனர் தெரிவித்தார்.

வவுனியாவைச் சேர்ந்த பி. எம். திசநாயக்கா சாட்சியமளிக்க அழைக்கப்பட்டபோது அவர் அங்கு சமுகமளிக்கவில்லை. (ச-இ)

# 40 தமிழர் கூச்சலிட்டபடி—

[7ம் பக்கத் தொடர்ச்சி]

பட்டனர். பின் பலர் கூட்டமாக வீதியில் கூடினார்கள். மாலை 4-30 மணிக்கு என் வீட்டுப் பின் பக்கம் வந்தார்கள் ஏ. எஸ். கந்தையா கடைக்குப் பின் பக்கம் வந்தனர். பெண்கள் அழுது குளறினார்கள். அந்தக் கூட்டத்தினர் சிங்கள ஆட்கள். கூட்டத்திலிருந்த சில சிங்களவர்கள், அக்கூட்டத்தில் நின்றவர்களைக் கூட்டிச் செல்லப்பார்த்தனர்.

பதவியாவிலிருந்து காடையர்கள் வருவதாகவும், எங்களைப் போகும்படியும் ஆலோசனை கூறினார்கள். முன்பு வந்த சிங்களக் கூட்டம் எங்களைத் தாக்கவில்லை.

நான் பின்கதவால் காட்டுக்குள் சென்றேன். பின் வவுனியா சென்றேன். பின் செப்டம்பர் 1-ம் திகதி மதவாச்சிக்கு வந்தேன். சில தளபாடம் வெளியில் போட்டு நெருப்பு வைத்திருந்தனர். கட்டடம் உடைக்கவில்லை. தாக்குதலின்றி போய்விட்டேன். எனக்கு 2 லட்சம் ரூபா வரை நஷ்டம். ஏ. எஸ். கந்தையாவிற்கு 50,000 ரூபா நஷ்டம். எனக்கு நட்டஈடு எதுவும் கிடைக்கவில்லை. மற்றொரு தமிழருக்கு சொந்தமான கடையும் மில்லும் கொள்ளையடிக்கப்பட்டன. மதவாச்சி பிரதான டவுனில் எந்தவித சேதமும் இல்லை. மதவாச்சி யூ. என். பி. அமைப்பாளர் ஆரியதாசா நகரம் தாக்கப்படாமல் பாதுகாத்தார்.

சட்: தென்னக்கோன்: கலவரத்தில் ஓடிய தமிழ் குடும்பங்கள் எல்லாம் திரும்பிவந்துவிட்டார்களா? ஆம்.

சட்: இப்ப குழப்பம் இல்லை? இல்லை.

# எனது பேரனும் மருமகனும் சிங்களவர்

## மருமகனைத் தாக்கிய சிங்களவர்கள் வீட்டைக் கொள்ளையடித்தனர்

அனுராதபுரம் களத்தாவையைச் சேர்ந்த விவசாயி கணபதிப்பிள்ளை இராமலிங்கம் கூறியதாவது: ஆகஸ்ட் 77ல் நான் களத்தாவையில் இருந்தேன். நான் ஒரு சிங்களப் பெண்ணை மணந்தேன். 3 சந்ததியாக களத்தாவலில் இருக்கிறோம். என் பேரன் ஒரு சிங்களவர். பேத்தி தமிழ்ப் பெண். களத்தாவையில் 50 தமிழ்க் குடும்பங்கள் உண்டு. என் வீடு, களத்தாவ பாடசாலைக்கு அருகில் 58 கலவரத்தில் என் குடும்பத்தை தவிர மற்ற எல்லாத் தமிழ்க் குடும்பங்களும் தாக்கப்பட்டன.

ஆகஸ்ட் 17ம் திகதி அனுராதபுரத்தில் கலவரம் என அறிந்திருந்தேன் மாலை 6-30 மணிக்கு ஒரு கூட்டம் டிராக்டரில் வந்தது பாடசாலைக்கு கிட்ட ஒரு கூட்டம் நிற்பதாக கூறினார்கள். டிரக்டர் பாடசாலையைத் தாண்டிச் சென்றது. சந்தியில் டிராக்டர் நின்றதாக சொன்னார்கள். நான் மனைவிக்குச் சொன்னேன் 'நகரில் கலவரம் இருப்பதால் வீட்டிலிருப்பது புத்தியல்ல' என்று. ஆனால் மனைவி நிற்கச் சொன்னார். எல்லாத் தமிழரும் போவதாக பாடசாலை இன்ஸ்பெக்டர் ஒருவர் கூறினார். மனைவியும், சிறுபிள்ளைகளும், மருமகனும் இருக்க பெரிய பிள்ளைகளும் நானும் காட்டுக்கு சென்றோம்.

### சிங்கள மருமகனுக்கு சங்கிலியால் அடித்தனர்

காட்டுக்குள் இருக்கும்போது பழைய களத்தாவ கிராமம் எரிந்தது. என் வீட்டை உடைத்து கொள்ளையடித்தார்கள். என் மருமகனுக்கு அடித்தார்கள் என் மருமகன் ஒரு சிங்களவர். அவருக்கும் சிங்களக் காடையர் சங்கிலியால் அடித்தனர்.

மறுநாள் காலை என் வீட்டிற்குபோய் பார்த்தேன் என் வீடு தாக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டிருந்தது. நான் போகும்போது எரிந்துகொண்டிருந்தது. மற்றொரு கூட்டம் வருவதாக சொன்னார்கள் மீண்டும் காட்டை நோக்கி ஓடினோம். வனபிதா பெர்ண்டிஸ் நாங்கள் கச்சேரிக்குச் செல்ல உதவினார் பின் கினிதோச்சிக்கு சென்றோம். பின் களத்தாவைக்கு திரும்பிவந்தோம். எரிக்கப்பட்ட வீட்டில் இருக்கிறோம். 3 குடும்பத்தை தவிர மற்ற தமிழ்க் குடும்பங்கள் திரும்பி வரவில்லை. சிங்களப் பெண்ணை திருமணம் செய்ததினால் களத்தாவைக்கு திரும்பிவந்தேன் எனக்கு 80,000 ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது. என் குடும்பத்தில் 14 பேர் உண்டு 4 பேர் திருமணம் செய்து விட்டார்கள் 10 பேரும் என் வருமானத்தில்தான் சீவிக்கின்றார்கள். [ச-அ]

# அமிரைச் சந்திக்க

## முத்துராமன் ஆர்வம்

(வெள்ளவத்தை)

இலங்கை விட்டு செல்வது என் தாயை பிரிவது போன்ற உணர்ச்சி ஏற்படுகிறது. விரைவில் இலங்கையைச் சுற்றிப் பார்க்க வருவேன். தமிழ்மக்கள் அதிகமாக வாழும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை பகுதிகளுக்குச் செல்வேன்.

இவ்வாறு 'வருவான் வடிவேலன்' படப்பிடிப்புக்காக வருகைதந்திருந்த நவரசத் திலகம் முத்துராமன் தமது துணைவியாருடன் தாயகம் திரும்பும்பொழுது தெரிவித்தார்.

கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் பத்திரிகையாளர்கள், கலைஞர்கள், ரசிகர்கள் ஆகியோர் படத் தயாரிப்பாளர் லட்சுமண செட்டியார் நடிகை சந்திரகலா, டைரக்டர் கே. சங்கர், கமிரா ராசராம் ஆகியோர் நன்றி தெரிவித்தனர்.

மேலும் நடிகர் முத்துராமன் கூறுகையில், படப்பிடிப்பில் கலந்துகொள்ளவேண்டியிருப்பதால் ஒழிவாக இங்குள்ளவர்கள் சந்தித்து உரையாட முடியாதவனாக இருக்கிறேன்.

எனவே அடுத்த முறை வரும்பொழுது விமானமார்க்கமாக யாழ்ப்பாணம் வந்துதான் கொழும்பு வருவேன். யாழ்ப்பாணத்தில் தங்கி அங்குள்ளவர்களை சந்திப்பதுடன் தமிழ்த் தலைவர்களையும் சந்திப்பேன்.

எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் திரு. அமிர்தலிங்கத்தை அடுத்த முறை சந்திப்பேன். தந்தை செல்வாவின் நினைவாலயத்தைப் போய்ப் பார்ப்பேன்.

"நான் அரசியலுக்கு அப்பாற்பட்டவன். ஆனால் தமிழ் உணர்ச்சிகாரணமாகத் தமிழ்ச் சகோதரர்களைச் சந்திப்பேன்"

'வருவான் வடிவேலன்' படப்பிடிப்புக் குழுவினர் சனிக்கிழமை மாலை சென்னைக்குப் பயணமாவார்கள். (உ)

## சந்தை இடமாற்றம்

[மன்னார்]

கடந்த பல வருடங்களாக மன்னார் பொதுச் சந்தைக்கருகாமையில் இருந்துவந்த ஞாயிறுசந்தை அண்மையில் அரைமயிலுக்கப்பாலுள்ள பட்டினசபை மைதானத்தில் திறவைப்பட்டுள்ளதால் மன்னார் மக்கள் கவலை கொண்டுள்ளனர்.

மலிவு விலையில் வாங்கப்படும் பொருட்களை அரைமைல் தூரமுள்ள பஸ் நிலையத்திற்கு கொண்டு செல்வதற்கு கூலியாட்கள் இரட்டிப்பு கூலி வாங்குவதால் பழைய இடத்திலாவது அல்லது பஸ் நிலையத்திற்கு அருகிலாவது ஞாயிறுசந்தையை நிறுவும்படி மன்னார் மக்கள் கோருகின்றனர் [உ]

## பால் சேகரிப்பு நிலையங்கள்

(உடுப்பிட்டி)

யாழ். மாவட்டத்தில் மூன்று பால் சேகரிக்கும் நிலையங்கள் நிறுவப்படவுள்ளன. தனுக்காய் கமத்தொழிற் சேவை நிலையப் பகுதியிலும் நல்லூர் கமத்தொழிற்சேவை நிலையப் பகுதியிலும் தொல்புரம் கமத்தொழிற்சேவை நிலையப் பகுதியிலும் இப்பால் சேகரிக்கும் நிலையங்கள் அமையுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# சுப்பிரமணியம் வீட்டில் 4000தோட்டாக்கள் கடகங்களில் இருந்தன!

## டிராக்டர்சாரதிவிமலதாசசன்சோனிகமிஷன்முன்சாட்சியம்

(அனுராதபுரம்)

மாமடுவ டிடக்ரர் சாரதி யூ. ஏ. விமலதாசா தமது சாட்சியத்தில் கூறியதாவது: சுப்பிரமணியத்தின்கீழ் டிராக்டர் சாரதியாகக் கடமையாற்றினேன். அவர் வீட்டிற்குச் செல்வது வழக்கம். எனக்கு ஒரு அறை உண்டு. சுப்பிரமணியம் விவசாயிகளுக்கு டிராக்டர் வாடகைக்கு விடுவார்.

ஆகஸ்ட் 77ம் ஆண்டு நான் வேலை செய்தேன். வவுனியாவில் இனக்கலவரம் நடந்தது எனக்குத் தெரியும்.

அந்தநேரம் மாமடுவ சுப்பிரமணியம் வீட்டில் ஆகஸ்ட் 18ந் திகதி வேலைக்குப் போனேன். தேவையான டிராக்டர் சாமான் எடுக்க அறைக்குச் சென்றேன். சில காட்போட் பெட்டிகளைக் கண்டேன்.

சட்: பெட்டிக்குள் என்ன கண்டீர்? கைக்குண்டுகள் இருந்தன.

கமிஷனர்: என்னகுண்டுகள்? திரி காணப்பட்டதால் குண்டுகள் என அறிந்தேன்.

கமிஷனர்: இதற்கு முன் குண்டுகளைத் தெரியுமா?

ஆம்?

### 4000 குண்டுகள்

அந்த அறையில் 4000 தோட்டாக்கள் இருப்பதைக் கண்டேன். பனை ஓலையால் செய்த கடகங்களில் தோட்டாக்கள் இருந்தன. அந்த வீட்டில் 15 அல்லது 20 தமிழர்கள் இருந்தனர். எனக்குக் கொஞ்சம் கொஞ்சம் தமிழ் தெரியும். அங்கு நின்றவர்கள் புதியவர்கள். சில நண்பர்களிடம் துவக்கு சேகரித்தார். துவக்குகளை நான் காணவில்லை. என் தம்பியும் அங்கு சாரதியாகக் கடமையாற்றினார்.

ஆகஸ்ட் 18-ந் திகதி மாமடுவில் குழப்பம் நடந்தது. சுப்பிரமணியம் வீடு எரிந்தது. நான் அப்போ வவுனியா வந்துவிட்டேன். சுப்பிரமணியத்திடம் ஒரு துவக்கு இருந்தது.

கமிஷனர்: நண்பர்களிடம் சேர்த்த துவக்குக்கு என்ன நடந்தது? தெரியாது. துவக்கு தமிழ்க் கிராமங்களிலிருந்து கொண்டு வரப்பட்டன.

### குறுக்கு விசாரணை

சட்டத்தரணி பாரிலட் குறுக்கு விசாரணை செய்தார்.

சட்: மற்றக் கிராமங்களிலிருந்து சுப்பிரமணியம் துவக்கு கொண்டு வந்தார்? ஆம்.

சட்: எப்ப? 18 ந் திகதி.

சட்: இந்தத் துவக்குகளை எடுக்க நீர் போநீர்? ஆம்.

சட்: துவக்கு கொடுத்தவர்களின் பெயர் தெரியாது?

தெரியாது.

சட்: வாய்ச் சொல்லில் உம்மிடம் துவக்குத் தந்தார்கள் என்பதை இந்தக் கமிஷனை நம்பச் சொல்கிறீரா? தந்தார்கள்?

சட்: கலவரநேரத்தில் சுப்பிரமணியம் வீட்டில் குண்டு, தோட்டா, துவக்குகளைப் பார்த்து விட்டீர், துவக்கு எடுக்கப் போனீர்? ஆம்.

சட்: இதை நம்பச்சொல்கிறீரா? ஆம்.

சட்: கலவரநேரத்தில் தமிழ் கிராமத்திற்கு ஒரு சிங்களவரை துவக்கு எடுக்க சுப்பிரமணியம் அனுப்பினார்? ஆம்.

சட்: சுப்பிரமணியம் வீட்டில் குண்டு இருப்பதாக ஏன் பொலிசுக்குச் சொல்லவில்லை?

சொன்னேன். கி.ச. தலைவர் அப்புகாமியிடமும் சொன்னேன்.

கமினர்: கிராமசேவகரிடம் போனீரா? இல்லை.

கமினர்: ஏன்? இதுபற்றி கிராம சேவகரிடம் சொன்னால் வேலையிலிருந்து நீக்கிவிடுவார் எனப்பயந்தேன்.

சட்: இப்பவும் அவருக்குக் கீழ் வேலை செய்கிறீரா?

இல்லை.

சட்: அப்புகாமிக்கு வீடுகளை சோதனையிட அதிகாரம் இல்லை என்று தெரியாதா? அவரிடம் சொன்னேன்.

சட்: நீர்சொல்லும் குண்டுக் கதை அத்தனையும் பொய்

உண்மை.

சட் தென்னக்கோன்: சுப்பிரமணியம் கன்னிபுரம் தமிழ்க் கிராமத்திற்கு அடிக்கடி சென்றார்? ஆம்.

### பெட்டிகளில் குண்டுகள்

மாமவடு டிராக்டர் சாரதி ஆரியாரச்சி கருணாரத்ன தமது சாட்சியத்தில் கூறியதாவது:

கடைசியாக சாட்சியமளித்தவர் என் சகோதரர். வவுனியா மாவட்டத்தில் நடந்த கலவரம் தெரியும். அந்தநேரம் டிராக்டர் ரைவராக சுப்பிரமணியத்தின் கீழ் வேலைசெய்தேன். 5 வருடம் வேலை செய்தேன். அவரிடம் 2 டிராக்டர்கள் உண்டு.

கலவர காலத்தில் சுப்பிரமணியம் வீட்டிற்கு சென்றேன். டிராக்டருக்கு சில சாமான்கள் எடுக்க அறைக்குப் போனேன். 5 காட்போட்பெட்டிகள் இருந்தது. திறந்து பார்த்தேன்.

கமினர்; ஏன் திறந்துபார்த்தீர்? புதிய உதிரிப்பாகங்கள் என நினைத்தேன். பெட்டிக்குள் குண்டுகள் இருந்தது. திரியும் இருந்தது.

சட்: இதற்குமுன் குண்டுகளைப் பார்த்திருக்கிறீரா? ஆம்.

சட்: குண்டுதான் எனப் பரீட்சித்துப் பார்க்கவில்லையா?

இல்லை.

சட்: வேறு என்ன கண்டீர்?

மூவாயிரம் அல்லது நாலாயிரம் தோட்டாக்கள் பனை ஓலைப் பெட்டிக்குள் இடப்பதை பார்த்தேன்.

கமிஷனர்: டிராக்டர் சாமான் அங்கு இருந்ததா? ஆம். இதைச் சொன்னால் எங்களை வேலையிலிருந்து நீக்கி விடுவதாக சுப்பிரமணியம் பயமுறுத்தினார்.

கமிஷனர்: எப்போது 18ம் திகதி.

கமிஷனர்: முன்பா? பின்பா? பின்னர்.

கமிஷனர்: சுப்பிரமணியம் வீட்டிலிருந்து கிராமசேவகர் வீட்டுக்கு எவ்வளவு தூரம்? அரை மைல்.

கமிஷன்: ஏன் போய் கிராம சேவகருக்கு சொல்லவில்லை? போகவில்லை.

சட்: யாரிடம் கூறினீர்? சைமன் அப்புகாமியிடம்.

சட்: சுப்பிரமணியம் துவக்கு வாங்கிவரச் சொன்னாரா? கன்னபுரத்திற்கு சென்று துவக்கு வாங்கிவரச் சொன்னார். ஆனால் வாங்கிவரவில்லை. கலவர காலத்தில் சுப்பிரமணியம் வீட்டுச் சாமான்களை டிராக்டரில் ஓமந்தைக்கு அனுப்பினார்.

சட்: தமிழ் தெரியுமா? இல்லை;

சட்: சுப்பிரமணியத்துடன் எந்த மொழியில் பேசுவீர்? சிங்களத்தில் அவருக்கு சிங்களம் தெரியும்.

---

## 'கந்தன் கருணை' என்கிறார் படத் தயாரிப்பாளர்

(வெள்ளவத்தை)

கொழும்பில் தொடங்கி கண்டி, நுவரெலியா, கதிர்காமம், மீண்டும் கொழும்பு ஆகிய இடங்களில் "வருவான் வடிவேலன்" படத்திற்காக படமாக்கப்பட்டன.

இம்மாதம் 26-ந் திகதி தணிக்கை செய்யப்பட்டு மே மாதம் 5ம் திகதி "வருவான் வடிவேலன்" திரையிடப்படும். இலங்கை காட்சிகள் எவ்வித இடையூறுமின்றி 'கந்தன் கருணையால்'' திரைப்படமாக்கப்பட்டன என்று தயாரிப்பாளர் திரு. லட்சுமண செட்டியார் கூறினார்.

இறுதி நாளன்று கொழும்பு விஹாரமகாதேவி பூங்கா, மிருகக் காட்சிசாலை, பண்டாரநாயக்கா, சர்வதேச மண்டபம், ஹோட்டல் பிரைட்டன் ஆகிய இடங்களில் படப்பிடிப்பு நடைபெற்றது. (உ)

---

# "எனக்கு பாடும் ஆர்வத்தைதூண்டியது பாகவதர் பாடல்களே"

## நாகூர்ஹனீபா பெருமிதம்

(வெள்ளவத்தை)

பாகவதரின் பாட்டைக் கேட்டதும் ஆர்வம் ஏற்பட்டது எனது பதின்மூன்று வயதிலேயே பாட ஆரம்பித்தேன். அப்பொழுது என்னைச் சுற்றி ஒரு கூட்டமே இருக்கும். எனது விடாமுயற்சியின் காரணமாக பாடல் பாடியே சம்பாதித்து வாழ்க்கை ஓடத்தை ஓட்டுகிறேன்.

இவ்வாறு இலங்கை வந்துள்ள மலேசியாவிலும் சிங்கப்பூர், தமிழகம் ஆகிய இடங்களில் கடந்த மும்பது வருடங்களாக ஆயிரத்துக்கு அதிகமான பாடல்களைப் பாடிப் புகழ்பெற்றுள்ள 'இசைத் தென்றல்' எச். எம். ஹனிபா 'ஈழநாடு' நிருபரிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

'நாகூர் எனது சொந்தஊர். சிறுவயதிலேயே எம். கே. தியாகராஜபகவதரின் பாடல் என்றால் எனக்கு உயிர். மெய்மறந்து அவரது பாடல்களைப் பாடி ரசிப்பேன்.

இந்தக்காலத்தில் நாடக நடிகர்களுக்கும் பாடகர்களுக்கும் அதிக மதிப்பு இருந்தது. இளமையிலேயே இசைத்துறையில் ஈடுபாடு கொண்ட நான் திராடக்கழகக் கூட்டங்களில் பாடி வந்தேன்.

1948ல் நாகையில் நடந்த திராவிடக்கழகக் கூட்டம் ஒன்றில் பெரியார் ஈ. வே ரா. அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, இப்போதய முதல்வர் எம். ஜி. ஆர். ஆகியவர்கள் கலந்து கொண்டார்கள். அவர்கள் முன்னிலையில் பாடல்களைப் பாடினேன்

பெரியார், அண்ணா, கருணாநிதி, எம். ஜி. ஆர். ஆகியோரர் எனது குரலினிமை பாராட்டி உற்சாகமூட்டினார்கள். பின்னர் நடிகர் எம். கே. முஸ்தபாவுடன் இணைந்து நாடகங்களில் பாடி நடித்து வந்தேன்.

நான் நடிகவேள் எம். ஆர். ராதா குழுவில் ஒரு வருடமிருந்தேன். பின்னர் நடிகர் கே. எஸ். பாண்டியனோடு 10 வருடகாலமிருந்தேன். அதன் பிறகு நாகூரில் தனியாக நாடகக்குழு ஒன்றை நடத்தி வந்தேன்.

இப்படி நாடகப்பற்றினால் எனது இசைத்துறை ஆர்வத்தை மேலும் வளர்த்துக் கொண்டேன்.

இந்நிலையில் எனது மனம் மார்க்கப்பற்றில் ஈடுபடத் துவங்கியது. இஸ்லாமிய சமயத்திற்காகவும் சமூகத்திற்காகவும் நாடகத்துறையினின்று ஒதுங்கி பக்திப்பாடல்களைப் பாடத் தொடங்கினேன்.

சரிநாடகப் பாடல்களையும் தத்துவப் பாடல்களையும் விரும்பிப் பாடுகிறேன். அல்லாவை நினைத்து அவனைப்பற்றிப்பாடும்போது நான் என்னையே மறந்துவிடுகிவேன். இதனால் பேரும் புகழும் கிடைக்கிறது.

இலங்கையில் தங்கியிருக்கும் பொழுது என் தாய்நாட்டையே மறந்துவிடுகிறேன். விரைவில் மீண்டும் எனது குழுவினருடன் இசைக்கச்சேரி செய்ய வருவேன்! இவ்வாறு பாடகர் எச். எம். ஹனிபா தெரிவித்தார். (உ)

---

## நூல்வெளியீட்டு விழா

(கொழும்பு)

ஈழத்தமிழ் எழுத்தாளர் பேரவை சேர். பொன். இராமநாதன் வாழ்க்கை வரலாற்றுத் தொகுதி இரண்டின் வெளியீட்டு விழாவினை ஜூன் மாதம் 5-ம் திகதி வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபதில் நடத்த விருக்கிறது.

ஈழவேந்தன் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் திரு. எஸ். தொண்டமான் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் எம். பி கோவை மகேசன் உட்பட மற்றும் பலர் உரையாற்றுவார்கள். (உ)

...

## மகோற்சவம்

(மாவிட்டபுரம்)

பிரசித்திபெற்ற தெல்லிப்பழை காசியிற் பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் கடந்த ஞாயிறன்று கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தினமும் சமயச் சொற்பொழிவுகளும் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகிறது. 10 தினங்கள் உற்சவம் தொடர்ந்து நடைபெற்று தேர்த்திருவிழாவும் தீர்த்தோற்சவமும் இறுதியாக நடைபெறவுள்ளன. (உ)

---

## 2 தொன் மீன்

சென்னை, ஏப். 29

தமிழ்நாடு ராயப்புரத்துக்கு அண்மையில் 2 தொன் மீன் ஒன்றை இயந்திரப் படகில் சென்ற மீனவர்கள் பிடித்து வந்துள்ளனர். [இ]

---

# "மார்க்ஸ், லெனின் சிந்தனைவழி ஒழுகுக"

## அளவெட்டியில் ஜே.வி.பி. பிரமுகர்

(பண்டத்தரிப்பு)

"மனிதனால் மனிதனைச் சுரண்டும் முதலாளித்துவ சமுதாயத்தைப் பாதுகாக்கும் இன, மொழி, மத பேதங்களை அறவே நீக்குவதற்கு இளைஞர்கள் எமது மக்கள் விடுதலை முன்னணிக்கு ஆதரவு அளிக்க வேண்டும். அடிமைத்தனத்தையும், அடக்கு முறையையும் நீக்கி, சமாதானத்தையும் அமைதியையும் அடைய வேண்டுமானால் நாம் துட்டகைமுனு எல்லாளன் அல்லது நெப்போலியன் ஹிட்லர் ஆகியோர் பக்கம் திரும்பாமல் லெனின், கார்ல்மாக்ஸ் ஆகியோர் பக்கம் எமது சிந்தனைகளைத் திருப்பவேண்டும்.'

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி வடபிரதேச அமைப்பாளர் திரு ஜி. எஸ். பொன்சேகா அளவெட்டி வடக்கு குருக்கள்கிணற்றடியில் நடைபெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

ஜே. வி. பி. பற்றி இக்கூட்டத்தில் இளைஞர்களினால் கேட்கப்பட்ட பல்வேறு கேள்விகளுக்கும் இக்கருத்தரங்கில் திரு பொன்சேகா தமிழ் மொழியில் பதில் அளித்தார். (உ)

---

# கரவை சிந்தாமணி விநாயகர்

## ராஜகோபுர மகாகும்பாபிஷேகம்

கோபுர தரிசனம் செய்ய நாம் செய்த பாவமெல்லாம் நீங்கிவிடுமென்பது சான்றோர் வாக்கு. ஆலயத்தின் பல பகுதிகளிலும் தனிச் சிறப்புடையது, இராஜ கோபுரமாகும். சூக்குமலிங்கத்தையும், பத்திரலிங்கத்தையும் போலன்றி, யாவரும் கண்ணுக்கெட்டிய தூரத்திலிருந்தே கண்ணீர் கசிந்துருகிக் கையெடுத்து வணங்குவதற்கு ஏதுவாய் அமைந்தது கோபுரம். எல்லாம் வல்ல இறைவன் இங்கும் வேண்டுவன ஈந்து, வெவ்வினை தீர்க்கச் சித்தங்கொண்டு எழுந்தருளியுள்ளான்.

மேற்குறிப்பிட்ட சகல சிறப்புக்களையும் கொண்ட இராஜ கோபுரம், கரவெட்டி தச்சந்தோப்பு சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயத்திலும் அமைக்கப்பட்டு, இன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. சகல திருப்பணி வேலைகளும் கருங்கல்லால் செய்தது இக்கோவிலின் தனிச் சிறப்பாகும். அதன் அழகையும், புனிதத்தையும் மேலும் மெருகூட்டும் வண்ணம் இராஜ கோபுரமும் மிக நேர்த்தியான முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கோபுரத்தை, வண்ணை வரதராஜப்பெருமான் தேவஸ்தான இராஜகோபுரத்தை அமைத்த தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு நாகலிங்கம் ஸ்தபதி அவர்களே அமைத்தார்கள்.

கடந்த நான்கு ஆண்டுகளாக கோபுர வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. மூன்று இலட்சம் ரூபா செலவாகியது. ஐம்பது அடி உயரமுள்ள இக்கோபுரம், சாஸ்திர ரீதியாக ஐந்து மாடங்களாக அமைக்கப்பட்டுள்ளது.

கண்ணைக் கவரும் சுருத்தாளம் மிக்க, கலைவளம் கொழிக்கும் இக்கோபுரம், 192 சிற்பங்களைக் கொண்டுள்ளது. கல்லிலே கலைவண்ணம் கண்ட அச்சிலைகள் மூலம் நமக்கு அரிய பல இதிகாசக் கதைகளையும் எடுத்தியம்புவது தனிச் சிறப்பாகும்.

குறமகள் வள்ளியை மணம் பூண்ட முருகன் கதைகள், பார்வதி-சிவன் வரலாறு, பிட்டுக்கு மண் சுமந்த கதை, கயிலைமலையை தகர்க்கும் இராவணன், யானை முகத்தோனின் அற்புதக் காட்சிகள், தேவர்களின் தெவிட்டாத அழகுச் சிலைகள் எல்லாம் மலிந்துள்ள இராஜகோபுரத்தைத் தரிசிப்போர் ஒருகணம் தம்மையே மறந்து, கண்ணீர் சொட்டக் கணபதியைக் கும்பிடும் காட்சி உள்ளத்தை உருக்குவதாகும்.

— ஆ. கந்தசாமி

இஸ்ரேல்
எகிப்து
சவூதி அரேபியா

# இந்த நாடுகளுக்கு அமெரிக்கபோர் விமானங்கள்

## முன்னைய திட்டம் மாருதுஎன்கிருர் கார்ட்டர்

வாஷிங்டன், ஏப். 26

இஸ்ரேல், எகிப்து சவூதி அரேபியா ஆகிய நாடுகளுக்கு 200 போர் விமானங்களை விநியோகம் செய்யும் அரசின் திட்டத்தில் எதுவித மாற்றமும் இல்லை என்று அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபரின் இத் திட்டத்தை அமெரிக்க காங்கிரஸ் எதிர்த்து வருகிறது. சவூதி அரேபியாவுக்கு 40 விசேட போர் விமானங்களை வழங்க அமெரிக்கா தீர்மானித்ததுவே காங்கிரஸின் இந்த எதிர்ப்புக்கு முக்கிய காரணமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### புழுதிப் புயல்

சென்னை, ஏப். 26

சென்னையில் நேற்று மாலை 60 கிலோமீட்டர் வேகத்தில் புழுதிப்புயல் வீசியது என்று அறிவிக்கப்பட்டது.

15 நிமிடம் வீசியபுயலை அடுத்து மழை பெய்தது. (இ)

## "மொரோவை உயிருடன் பார்க்க விரும்புகிறோம்"

### கடத்தல் காரரிடம் குடும்பத்தினர் வேண்டுகோள்

ரோம். ஏப் 26

கடத்திச்செல்லப்பட்ட இத்தாலிய முன்னாள் பிரதமர் திரு. அல்டோமொரோவைத் தாங்கள் உயிருடன் பார்க்க விரும்புவதாக அவரின் குடும்பத்தினர் கடத்தல் காரர்களிடம் பத்திரிகை மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இத்தாலியில் வெளிவரும் 'மிலான்' என்ற பத்திரிகை மூலமே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதேவேளையில் இக்கடத்தல் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் 9 பேரைக்கைது செய்யுமாறு இவ்விவகாரம் குறித்து விசாரணை செய்து வரும் அரச சட்டத்தரணி உத்தரவிட்டுள்ளார்.

இதேசமயம் பொலிசார் இது தொடர்பாக 20 பேரைச் சந்தேகத்தின் பேரில் தேடிவருகின்றனர்.

### ஆஸ்திரியாவில் றொனி பேச்சு

வியன்னா, ஏப் 26

இலங்கை சுதந்திர வர்த்தக வலயத்தில் ஆஸ்திரிய நிறுவனங்களும் முதலீடு செய்வது தொடர்பாக இலங்கை நிதி அமைச்சர் திரு றொனி டி. மெல் நேற்று ஆஸ்திரிய நிதி அமைச்சரிடம் பேச்சு நடாத்தியுள்ளார்.

இலங்கை ஜனாதிபதி திரு ஜே. ஆர் ஜெயவர்த்தனவின் விசேட செய்தி ஒன்றையும் திரு. றொனிடிமெல் ஆஸ்திரிய துணைத்தலைவரிடம் கையளித்தார். (இ)

## சுவீப் முடிவுகள்

நுவரேலியாவில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 660-வது சுவீப் முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு:
22 W 0840
ரூபா 1,00,000

2-வது பரிசு:
14 X 0669
ரூபா 40,000

3-வது பரிசு:
24 A 0478
ரூபா 10,000

தலா ரூபா 1866.50 சதம் பெறும் 100 டிக்கெட்டுகளின் விபரம்:

| | |
|---|---|
| 47 A 0492 | 51 A 0745 |
| 51 A 0405 | 14 A 0014 |
| 39 A 0167 | 29 B 0315 |
| 07 B 0837 | 25 B 0979 |
| 07 B 0952 | 52 B 0765 |
| 03 B 0610 | 16 C 0309 |
| 10 C 0473 | 60 C 0071 |
| 30 D 0557 | 52 D 0244 |
| 33 D 0361 | 54 D 0698 |
| 31 D 0801 | 24 E 0692 |
| 11 F 0020 | 29 F 0944 |
| 14 F 0006 | 32 F 0685 |
| 27 G 0662 | 20 G 0082 |
| 14 G 0357 | 16 G 0032 |
| 34 H 0395 | 01 J 0310 |
| 57 J 0744 | 43 J 0827 |
| 41 J 0555 | 35 K 0824 |

| | |
|---|---|
| 55 K 0356 | 23 K 0132 |
| 15 K 0961 | 55 L 0627 |
| 43 L 0189 | 44 L 0146 |
| 57 M 0758 | 55 M 0833 |
| 60 N 0664 | 62 N 0060 |
| 10 N 0248 | 24 N 0700 |
| 44 N 0645 | 05 O 0796 |
| 23 O 0326 | 07 O 0421 |
| 43 O 0181 | 44 O 0466 |
| 09 P 0326 | 60 P 0656 |
| 57 Q 0284 | 54 Q 0621 |
| 11 Q 0439 | 09 Q 0068 |
| 32 R 0276 | 32 R 0343 |
| 16 R 0871 | 37 R 0022 |
| 42 R 0223 | 10 R 0332 |
| 02 S 0655 | 62 S 0997 |
| 11 S 0160 | 33 T 0879 |
| 22 T 0767 | 48 U 0572 |
| 29 U 0388 | 32 U 0197 |
| 62 U 0659 | 17 U 0485 |
| 30 V 0287 | 08 V 0943 |
| 62 V 0942 | 48 V00 92 |
| 37 V 0461 | 42 V 0286 |
| 14 V 0560 | 03 V 0408 |
| 55 V 0475 | 45 W 0897 |
| 26 W 0621 | 55 W 0391 |
| 01 X 0012 | 35 X 0091 |
| 58 X 0452 | 41 Y 0913 |
| 35 Y 0520 | 18 Y 0756 |
| 54 Y 0702 | 22 Y 0213 |
| 06 Z 0543 | 05 Z 0248 |
| 16 Z 0942 | 58 Z 0254 |
| 26 Z 0198 | 07 Z 0589 |

(இவை யாவும் உறுதிப் படுத்தப்பட வேண்டியவை)

## புங்குடுதீவில் இன்று பஞ்சமுக விநாயகர் பிரதிஷ்டை

— ம. பொ. செல்வரத்தினம் —

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலைக் காவியத்து இருங்கடல் வாங்கு திரையுடுத்த மணிபல்லவத்திடை............திரைதவழ் பறவையும், விரிசிறைப்பறவையும்.........பன்னிறப்புள்ளினம் பரந்தொருங்கீண்டி......வீசு நீர்ப்பரப்பினெதிரிருக்கும் துறையும் துறைசூழ் நெடுமணற்குன்றமும்.........வெண்மணற்குன்றமும் விரிபூஞ் சோலையும் தண்மணல் பொய்கையும்' என்ற வர்ணனைகளை நோக்குமிடத்து யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கும் தமிழகத்துக்குமிடையேயுள்ள தீவகங்கள் மணிபல்லவத்தின் எஞ்சியிருக்கும் பகுதிகளேயென்று ஐயுற வேண்டியுளது என்பர் ஆராய்ச்சியாளர். இன்னும் சக்திபீடங்களுள் ஒன்றான புண்ணியப் பெருஞ்ஷேத்திரம் நயினாதீவில் இருப்பது இக்கருத்தை வலியுறுத்துகிறது. கடல்கோளுக்குப்பின் இந்நீர்ப் பரப்பு ஆழ்கடலாயிருந்த காலத்தில் கீழைத்தேயத்திலிருந்தும் மேலைத்தேயத்திலிருந்தும் புறப்பட்ட கப்பல்கள் பெருந்துறையாய் விளங்கிய மாதோட்டையை அடைய இக்கடல் மார்க்கத்தைப் பயன்படுத்தினர். அதனால் இக்கரைமருங்கே பெருந்துறைகளும் பட்டினங்களும் இருந்ததை காலச்சுவடுகள் புலப்படுத்துகின்றன. போர்த்துக்கேயரின் படையெடுப்புகளால் கரையோரப் பிரதேசம் நிலைகுலைந்தது.

ஆதிவர்த்தகத்துக்கு மத்தியாகவிருந்த பிரதேசங்களில் விநாயக வழிபாடு இருந்ததை ஆராய்ச்சி வெளிப்படையாகக் காட்டியுளது. இப்பண்பாடு தொடர்ந்திருந்ததை இத்திலகங்கள் அனைத்தும் அனுட்டிக்கப்பட்ட விநாயகவழிபாட்டால் அறியலாம். இவ்விநாயக வழிபாடு மறுமலர்ச்சி பெற்று மலருங்காலத்தை எய்தியதை பஞ்சமுகவிநாயகர் விக்கிரகங்கள் காட்டுகின்றன. சம்பத்தீவுகளில் முதன்மை பெற்று விளங்கும் புங்குடுதீவு என்னுந் திலகம், பஞ்சமுகவிநாயகரை பிரதிஷ்டை செய்விப்பதால் விநாயக வழிபாட்டின் மலருங்காலத்தை உணர்த்தி நிற்கிறது. இவ்வைபவத்துக்காக அரியநாயகன்புலம் வீரகத்தி விநாகர் தேவஸ்தானம் இன்று வியாழக்கிழமை காலை பெருவிழா எடுக்கிறது. சமயச் சொற்பொழிவுகளும் வேறு பல நிகழ்ச்சிகளும் இடம் பெறும். இப்பஞ்சமுக விநாயகர் விக்கிரகத்தை பஞ்சலோகத்தில் தெய்வாம்சம் பொலிய வடித்துக் கொடுத்துள்ளார் கோண்டாவில் பிரபல ஸ்தபதி நாகலிங்கம் சோமசுந்தரம்.

இப்பெருவைபவத்தில் கலந்துகொள்வோமாக.

### பஞ்சமுக விநாயகர்

தந்தை தவநிலைச் சிந்தனை தாங்கிய சக்திநிலை
மைந்தன் நிலைமகா தந்தை நிலைக்குயர் மாட்சிநிலை
தந்த விநாயகன் பஞ்ச முகத்தொடு சார்ந்தநிலை
வந்த திருபுரா சூர வதைக்கொரு மாற்றமதே!

ஐந்து முகம் பொலி தந்தை முகந்தலி லானைமுகம்
வந்து பொருந்திய தோவெனச் சிந்தனை செய்யமனம்
சுந்த விநாயகன் தத்துவ மாகிய பஞ்சமுகம்
தந்தை தலைமுறை தாமென ஒமெனும் சக்தியதே!

நற்புங் குடுதீவு நாடரிய நாயகன்நேர்
பொற்பார் புலத்துப் புனிதனிலே—பற்றுசீந்த
அன்புநிறை ராம்சேது அன்றோ மகாலிங்கம்
பொன்நேர்த்தி செய்தார் பொலிந்து

— அரியாலையூர் வே. ஐயாத்துரை —

### வால்ட்ஹெய்ம் கோரிக்கை

ரோம், ஏப் 26

42 நாட்களுக்கு முன்கடத்தப்பட்ட முன்னாள் இத்தாலியபிரதமர்திரு. மொரோவை உடன் விடுதலை செய்யுமாறு ஐ. நா. பொதுச்செயலாளர் டாக்டர் குர்த்வால்ட்ஹெய்ம் இத்தாலிய தொலைக்காட்சி மூலம் கடத்தல் காரரைக் கேட்டுள்ளார்.

ஐ நா. பொதுக்காரியதரிசி இம்மாதிரியான கோரிக்கைகளை நாடுகளின் அரசாங்கங்களுக்கு மட்டுமே இருக்கலாம் என்ற ஐ நா. அமைப்பு விதி இருந்து வருகின்றபோதிலும் டாக்டர் வால்ட்ஹெய்ம் முதல்தடவையாக அவ்விதிக்கு விரோதமாக கடத்தல்காரர்களுக்கு இக்கோரிக்கையை விடுத்துள்ளார். (இ)

### ம.பொ.சி. மேல்சபைத் தலைவர்!

சென்னை, ஏப். 26

தமிழக மேல்சபையின் தலைவராக சிலம்புச்செல்வர் ம. பொ. சிவஞானக்கிராமணியார் போட்டியின்றித்தெரிவு செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சபையின் தலைமைப் பதவிக்கு திரு. ம.பொ. சி.யைத் தவிர வேறு எவரும் வேட்புமனு தாக்கல் செய்யவில்லை. (இ)

### கம்யூ. தலைவர் சுட்டுக் கொலை

இஸ்லாமாபாத் ஏப். 25

ஆப்கானிஸ்தான் கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் ஜனுப் அமீர் அக்பர் கடந்தவாரம் துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளாரென பாக் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ)

சென். பற்றிக்ஸ் கல்லூரியில்:

## யாழ். அரசாங்க அதிபருக்கு பொது வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. ஏ. ஏ. யோசேப், அரசாங்க அதிபராக நியமனம் பெற்றதைப் பாராட்டும் முகமாக யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினர், எதிர் வரும் சனிக்கிழமை பொது வரவேற்பு ஒன்றை அளிக்க வுள்ளனர்.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கும் இந்த வைபவத்தில் யாழ் தேசிய பேரவை உறுப்பினர், யாழ். பொலிஸ் அதிபர், யாழ். மாநகரசபை விசேட ஆணையாளர். வடமாகாண கல்வி வித்தியாபதி, யாழ். லயன் கழகத் தலைவர், யாழ். றோட்டறிக் கழகத் தலைவர் உட்பட இன்னும் பலர் பேசுவார்கள். இந்த வரவேற்பு வைபவத்துக்கு யாழ்ப்பாண ஆயர் அதி வண. கலாநிதி பி. தியோகுப்பிள்ளை பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

யாழ். அரசாங்க அதிபர் திரு ஏ. ஏ. யோசேப், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரின் பழைய மாணவருள். அக்கல்லூரில் ஆசிரியராகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி வரவேற்புக்கான சகல ஏற்பாடுகளையும், சென். பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்க உபதலைவர் டாக்டர் ஜே. பி. லி. பீலிப்ஸ் செய்து வருகின்றார். (அ)

### கி. சே. பிரிவுகள் மாற்றம்

(உடுப்பிட்டி)

வடமராட்சி தெற்கு-மேற்கு உதவி அரசாங்க அதிபர்பிரிவு வடமராட்சி வடக்கு - கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஆகியன தேர்தல் தொகுதி அடிப்படையில் கிராமசேவகர் பிரிவுகளைப் பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் தற்போது வடமராட்சி தெற்கு—மேற்கு உதவி அரசாங்க அதிபரின் பகுதியிலுள்ள புலோலி தெற்கு, புலோலி மேற்கு, அல்வாய் தெற்கு ஆகிய கிராம சேவகர் பகுதிகள் பருத்தித்துறைத் தொகுதிக்கான வடமராட்சி வடக்கு - கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுடனும் வல்வெட்டித்துறை கெருடாவில், தொண்டமானாறு ஆகிய வடமராட்சி வடக்கு - கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கிராம சேவகர் பிரிவுகள் உடுப்பிட்டித் தொகுதிக்கான வடமராட்சி தெற்கு-மேற்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்துடனும் சேர்க்கப்படவுள்ளன.

### மீசாலையில் ஞாயிறு சந்தை

(மட்டுவில்)

சாவகச்சேரித் தொகுதி அபிவிருத்திச் சபை, மீசாலையில் தனது முதல் முயற்சியாக ஒரு ஞாயிறு சந்தையை அமைத்துள்ளது. சாவகச்சேரி நகரசபை விசேட ஆணையாளர் திரு. நவரத்தினராஜா இதைச் சம்பிரதாயப்படி திறந்து வைத்தார். எஸ். கே. மயில்வாகனம் திறப்பு விழாவில் மங்கல விளக்கை ஏற்றி வைத்தார். (உ)

### கருத்தரங்கு

(வெள்ளவத்தை)

இந்திய சஞ்சிகை பிரசுரங்களின் கட்டுப்பாடற்ற இறக்குமதியும் ஈழத்து தமிழ் இலக்கிய முயற்சிகளின் மீதான பாதிப்பும் என்ற கருத்தரங்கு இம்மாதம் 30-ம் திகதி கொழும்பில் நடைபெறும்.

மேற்படி கருத்தரங்கை இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகமும் இணைந்து நடத்துகின்றன. கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் இக்கருத்தரங்கு நடைபெறும். (உ)

### பொதுக் கிணறு

(உடுப்பிட்டி)

புலோலி மேற்கு வட்டுவனைக் குடியேற்றத் திட்டத்தில் பொதுக்கிணறு ஒன்று தோண்டப்படவுள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் இக்கிணற்றிற்கான நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்.

# ரயில்சாரதி, அண்டர்காட் வீடுகளில் என் பொருட்கள் மீட்கப்பட்டன

## சாவகச்சேரி ரயில் நிலைய அதிபர் 'சாட்சியம்

(அனுராதபுரம்)

"ஆகஸ்ட் கலவரத்தின் போது அனுராதபுரத்தில் இருந்தேன். நான் குடும்பத்துடன், ஆடி அமாவாசைக்கு 14ந் தேதி கீரிமலைக்கு வந்துவிட்டேன். அனுராதபுரத்திலுள்ள என் பங்களாவில் கொலையுண்ட திருநாவுக்கரசு, பத்மநாதன், எனது பணிப் பெண் ஆகியோர் இருந்தனர். 19ந் தேதி என் பங்களா கொள்ளையடிக்கப்பட்டதாகத் தகவல் கிடைத்தது. 25ந் தேதி காங்கேசன்துறைப் பொலிஸ்நிலையத்தில் புகார் செய்தேன். செப்டம்பர் 7ந் தேதி அனுராதபுரம் இணைப்பு அதிகாரிக்கு என் பொருட்கள் பற்றிய பட்டியல் ஒன்று அனுப்பினேன். செப்டம்பர் 10ந் தேதி என்னை அனுராதபுரம் இராணுவ முகாமிற்கு வருமாறு அறிவிக்கப்பட்டது. 21ந் தேதி அனுராதபுரம் சென்று இராணுவத்தினருடனும், பொலிஸாருடனும் என் பொருட்களைத் தேடுதல் நடத்தினேன்.

"லொக்கோமோட்டிவ்" எஞ்ஜின் சாரதி டயஸ் வீட்டில் சாமான்களுடன், என் பையும் கைப்பற்றப்பட்டது:

"ஈ. ஏ. குணரத்ன வீட்டில் எனது ஸ்பிரிங் கட்டில், இரட்டைக் கட்டில், 3 தலையணைகள் கைப்பற்றப்பட்டன.

"அண்டகாட்" நந்தசேன வீட்டில் நகைப்பெட்டி, 3 கதிரைகள், ஒரு மேசை ஆகியவற்றை எடுத்தோம்.

"எஸ். சொலமன் வீட்டில் 'கேஸ் கோட்' வளரி எடுத்தோம். என் பொருட்கள் மீட்கப்பட்டன. குணவர்த்தன மட்டும் கைதானார். இராணுவத்தினர் எல்லாவற்றையும் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இவைகள் என்னுடைய சாமான்கள் என நிரூபிப்பேன் என்று சொன்னேன்."

மேற்கண்டவாறு சாவகச்சேரி ரயில்நிலைய அதிபர் வி. ஏ. செகராஜசிங்கம் அனுராதபுரத்தில் சன்சோனி கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் கூறினார்.

### 6 மாதக் குழந்தையுடன் 3 நாட்கள் காட்டில் இருந்தேன்

அனுராதபுரத்தைச் சேர்ந்த வியாபாரி கண்ணன் புளியப்பு கூறியதாவது: "ஆகஸ்ட் 17, மகாபுளங்குளம் என்ற இடத்தில் கடை வைத்திருந்தேன். அங்கு 7 தமிழ்க் குடும்பங்கள் இருந்தன 32 வருடமாக அங்கு வாழ்ந்தேன். 58ம் கலவரத்தில்கூட அங்கு ஒரு குழப்பமும் இல்லை.

ஆகஸ்ட் 17ந் தேதி அனுராதபுரத்தில் குழப்பம் என அறிந்தேன். என் கிராமத்தில் கரைச்சல் ஏற்படும் என நினைக்கவில்லை. கடையை மூடிவிட்டுப் போகும்படி அயலவர்களான சிங்களவர்கள் சொன்னார்கள். பிள்ளைகளைக் காட்டுக்குக் கூட்டிச் சென்றேன். அருகிலுள்ள தமிழர்கள் தாக்கப்படுவதாகக் கேள்விப்பட்டேன். பின் ஒரு கூட்டத்தைக் கண்டேன். என் வீட்டை நோக்கி வந்தனர். நானும் காட்டை நோக்கி ஓடினேன். அவர்களை அடையாளம் காணமுடியாது காட்டில் இருந்தபோது என் கடை உடைத்துக் கொள்ளையடிக்கப்பட்டதாக அறிந்தேன் நான் காணவில்லை. 6 மாதக் குழந்தையும் என்னுடன் காட்டில் 3 நாட்கள் இருந்தது. மறுநாட் காலை, என் தம்பியாருக்குச் சொந்தமான 2 டிராக்டர் பெட்டிகளுக்கு நெருப்பு வைக்கப்பட்டதைக் கண்டேன்.

நான்கு பேரைத் தெரியும். ரூகன், வசந்தன், சொடர்வில பண்டா, உக்குபண்டாகே கிரிபண்டா ஆகியோரைத் தெரியும். இந்த நான்கு பேரும் சிங்கள ஆட்கள். 21ந் தேதி வரை பிள்ளைகளுடன் காட்டுக்குள் இருந்தேன். சிங்கள அயலவர்கள் காட்டுக்குச் சாப்பாடு அனுப்பிக் கொண்டிருந்தனர். போஸ்ட் மாஸ்டர் சதுபண்டா, பொலிஸாரின் உதவியுடன் அனுராதபுரம் கச்சேரிக்குக் கூட்டிச் சென்றார். பின் வவனியா சென்றோம். பின் என் மனைவியின் ஊரான மட்டக்களப்புக்குச் சென்றேன்.

### வடக்கில் காணி வேண்டும்

பொத்துவில் எம். பி திரு கனகரத்தினம் எனக்கு அங்கு காணி எடுத்துத் தருவதாக உறுதியளித்திருந்தார். ஆனால் அதற்கிடையில் அவர் சுடப்பட்டார். பின் அவரைக் காண முடியவில்லை. அதனால் அனுராதபுரத்திற்கு வந்தேன் எனக்கு வவனியா, கிளிநொச்சி, செட்டிகுளம் பகுதியில் ஒரு காணித்துண்டு வேண்டும். அனுராதபுரத்தில் எந்தவிதமான தொழிலும் செய்யமுடியாமல் தவிக்கிறேன். அனுராதபுரத்தில் சில தமிழர்கள் மீண்டும் வந்திருக்கிறார்கள்.

மாமடுவைச் சேர்ந்த பி. ஏ. ஆரியபால கூறியதாவது:

ஆகஸ்டில், நான் விஸ்வமடுவில் மரக்காலை வைத்திருந்தேன். மனைவி, மக்களும் என்னுடன் இருந்தனர். ஆகஸ்ட் 16ந் தேதி நான் மரக்காலைக்குப் போனபோது அங்குள்ள வண்டிலைக் கிணற்றுக்குள் போட்டிருந்தனர் யார் கிணற்றுக்குள் போட்டார்கள் என்று எனக்குத் தெரியாது.

சிங்கள மக்கள் தாக்கப்படுவதாகவும், எங்களைப் பாதுகாப்பான இடத்திற்குச் செல்லுமாறும் 'கொலனி'யில் இருந்து வந்தவர்கள் சொன்னார்கள். கடையை மூடிவிட்டுப் புறப்பட்டேன்.

ஆகஸ்ட் 17ந் தேதி கந்தசாமியும், இரத்தினமும் என் வீட்டைத் தாக்கினார்கள். நான் காட்டுக்குள் ஓடிவிட்டேன் என் மனைவியும் பிள்ளைகளும் மாமா வீட்டுக்குச் சென்றுவிட்டனர். இரவு முழுவதும் காட்டில் இருந்தேன். ஆகஸ்ட் 18ந் திகதி திரும்பி வந்தேன். பஸ் சாரதி சண்முகராசா என்னைக் கூட்டிவந்தார். என் வீட்டிற்குத் திரும்பிப் போய்ப் பார்த்தேன். வீட்டிலும், கடையிலுமுள்ள சாமான்கள் கொள்ளையடிக்கப்பட்டிருந்தன. நான் 18ந் தேதி முல்லைத்தீவு இராணுவத்திற்குப் புகார்செய்தேன். மாமடுவ அகதிகள் முகாமிற்குச் சென்றேன். விஸ்வமடுவில் எனக்குச் சொந்தமாகக் காணி உண்டு எனக்கு 25,000 ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

# 40 தமிழர் கூச்சலிட்டபடி வந்து என்னை உதைத்தனர்

## பரந்தன் மெக்கானிக்சாட்சியம்

மாமடுவைச் சேர்ந்த மெக்கானிக் குணசேகர கூறியதாவது: 77 ஆகஸ்ட்டில் பரந்தனில் வசித்தேன். பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தில் வேலைசெய்தேன். பரந்தனில் என் மனைவி பிள்ளைகளுடன் வாழ்ந்தேன். ஆகஸ்ட் 16ந் தேதி ஒரு மணிக்கு 40 பேர் என் வீட்டுக்கு வந்தனர். கோஷமிட்டுக்கொண்டு வந்தனர். சோமசுந்தரமும், மச்சானும் முன்னுக்கு வந்தனர். 2 மாதத்தின் முன் என்னை வீட்டிலிருந்து வெளியேற்ற முயன்றபோது பொலிஸில் புகார் செய்தேன். தலையிடவேண்டாமெனப் பொலிஸார் சோமசுந்தரத்திடம் கூறியிருந்தனர். பின்பு கூட்டமாக வந்தபோது வழக்கம் போல் வருவதாக நினைத்தேன். ஆனால் அவர்கள் கூச்சலிட்டபடி வந்தனர். என் மனைவியும் பிள்ளையும் பயந்து ஓடினார்கள். நான் ஒளித்திருந்தேன். அவர்கள் வீட்டைத் தாக்க ஆரம்பித்தனர். நான் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்திற்கு ஓடினேன். என்னைத் துரத்திக்கொண்டு வந்தனர். பரந்தன் மரடிப்போவுக்கு முன்னால் பிடித்துத் தாக்கினார்கள்; உதைத்தார்கள்.

சிங்களவர் இனிமேல் இந்தப் பகுதியில் நடமாடமுடியாது. போய்விடுங்கள் என்றனர். பின் என்னைச் சிலர் பொலிஸ்நிலையத்தில் சேர்த்தார்கள். பொலிஸாருக்கு என் வாக்குமூலத்தை பதிவுசெய்ய நேரமில்லையென்றும் வவனியாவிற்குச் செல்லச் சொன்னார்கள். இராணுவத்தினருடன் வவனியா சென்றேன். அங்கிருந்து அனுராதபுரம் சென்றேன் பரந்தனுக்கு நான் திரும்பிப் போகவில்லை. பரந்தன் போவது பாதுகாப்பில்லை; போகவும் மாட்டேன்.

'குணசேகராவை இங்கு இருக்க விடமாட்டோம், கொலைசெய்வோம், சிங்களவருக்கு இங்கு இடமில்லை' என தமிழர் கூட்டமாகக் கூச்சலிட்டுக்கொண்டு வந்ததாக சட்டத்தரணி நைல்ஸ் குறுக்கு விசாரணைசெய்தபோது அவர் கூறினார்.

சட்டத்தரணி விக்கிரமசிங்க பாதிக்கப்பட்ட சிங்களச் சாட்சிகள் சார்பில் ஆஜரானார்.

### மதவாச்சி நகரை எம் பி. பாதுகாத்தார்

மதவாச்சி விவசாயி மருதப்பிள்ளை கருப்பையா பிள்ளை கூறியதாவது: 77 ஆகஸ்டில் மதவாச்சி ரயில்வே டவுனில் வசித்தேன். கடை ஒன்று நடத்துகிறேன். என் மகன் அதை நடத்துகிறார். அது என் சொந்தக் கட்டிடம் ரயில்வே டவுனில் 15 தமிழ்க் குடும்பங்கள் இருந்தன.

ஆகஸ்ட் 17ந் தேதி காலை 10 மணிக்கு மதவாச்சி ரயில் நிலையத்தில் ஊழியர் தாக்கப்

[4-ம் பக்கம் பார்க்க]

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30,
வாடைக்காற்று

வெல்லி (மானிப்பாய்)
தினசரி:
6-30, 9-30
சிவாஜி - மஞ்சுளா
மனிதனும் தெய்வமாகலாம்

நாகம்ஸ் (மல்லாகம்)
தினசரி:
6-45, 10-00
விஜயகுமார் நடித்த
தாயில்லாக்குழந்தை

Rio (Jaffna) (Phone; 7607)
Now showing
Man in the Iron Mask
New Release (Color)

4-வது வெற்றி வாரம்
ராணி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஏ. ஈ. மனோகரன்-சந்திரகலா
வாடைக்காற்று

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரவிசந்திரன், கே ஆர். விஜயா, விஜயகுமார், நிர்மலா, அசோகன் நடித்த
ஜானகி சபதம்

Regal (Jaffna) Daily 4-45, 7-00 and 9-30 p.m.
TONY CURTIS ROGER MOORE in
SPORTING CHANCE
(Color) (Spy Film)

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி.ஆர்., விஜயா, நாகேஷ் நடித்த
நல்லநேரம்

4வது ஜனத்திரள் கடைசி வாரம்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
இதுவரை யாழ். நகரில் திரையிடப்பட்ட பழைய படங்களின் வசூலை முறியடித்து சாதனை புரிகிறுன்
எம்.ஜி.ஆர். - பத்மினி - வீரப்பா நடித்த
விக்கிரமாதித்தன்
(புதிய பிரதி)

வெற்றிகரமான 2-வது மாதம்
மனோகரா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.-வாணிஸ்ரீ நடித்த
ஊருக்கு உழைப்பவன்

வெலிங்டன் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயா
கிரகப்பிரவேசம் (கலர்)

லிடோ போன்: 7692 கடைசி வாரம்
(யாழ். நகர்)
சிவபாதவிருதயர், சந்திரகலா நடித்த
தென்றலும் புயலும்

சாந்தி (யாழ். நகர்) போன்: 7648;
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
3-வது வாரம்
இன்னும் சில தினங்கள் மட்டுமே காண்பிக்கப்படும்.
சிவாஜி நடிக்கும் கந்தன்கருணை ஈஸ்ட்மன் கலர்
விசேட படக்காட்சி 29-ம் 30-ம் திகதி
சனி, ஞாயிறு காலை 8-30 மணிக்கு மட்டும்
SADKO

## கவியரசர் கண்ணதாசன்

# நிச்சயம் வருவதாக கூறியிருந்தாராம்

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் நினைவாஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு தான் நேற்று யாழ்ப்பாணம் வருவது நிச்சயம் என்று தமிழக அரசின் ஆஸ்தான கவிஞர் கண்ணதாசன் கொழும்பில் இருந்து நேற்று முன்தினம் அவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட தந்தை செல்வா அறங்காவல் குழுப்பிரமுகர் சட்டத்தரணி திரு. உருத்திரமூர்த்தியிடம் தெரிவித்திருந்தாராம்

இதனையடுத்தே வரவேற்புக்கான ஏற்பாடுகள் பலாலி விமான நிலையத்தில் செய்யப்பட்டதாக அறங்காவல்குழுப் பிரமுகர் ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

நேற்றுப் பிற்பகல் கவியரசு வருவார் என்று எதிர்பார்க்கப்பட்ட விமானத்தில் வந்த பிரயாணி ஒருவரிடம் தாம் விசாரித்தபோது தமிழகப் பத்திரிகைகளில் 'கண்ணதாசன் இலங்கை வர அனுமதி மறுப்பு' என்று வெளியாகியிருந்தது என்று தெரிவித்ததாக அறங்காவல்குழுப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

இச்செய்தி உறுதியானதா என்று தெரியவில்லை என்று கூறிய அப்பிரமுகர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்ணதாசன் வருவதற்கான விசா இலங்கை அரசால் வழங்கப்பட்டுவிட்டதாகவும் கூறினர்.

### கோப்பாய் எம். பி. தமிழ்நாடு பயணம்

இது இவ்வாறிருக்க கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை நேற்று திருச்சி பயணமானர். அவர் பயணத்திற்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை.

இன்று கண்ணதாசன் முற்பகல் வரும் விமானத்தில் சிலவேளை வரக்கூடும் என்றும் எனினும் நிச்சயமில்லாத இந்நிலையில் விமானநிலையம் சென்று வீணாக சிரமம் அடைய வேண்டாம் என்று பிரஸ்தாப அறங்காவல்குழுப் பிரமுகர் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். [உ]

## ம.பொ.சி. ஏகமனதாக தெரிவு

சென்னை, ஏப் 26

தமிழ்நாடு சட்ட மேலவைத் தலைவராக ம. பொ. சிவஞானகிராமணியார் இன்று ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார் துணைத் தலைவராக திரு. சுவாமிநாதன் தெரிவுசெய்யப்பட்டார்.

## "வேலைவாய்ப்பு தகைமை உள்ளோர்க்கு மட்டுமே"

### தப்பபிப்பிராயத்துக்கு வி. என். மறுப்பு

(மட்டுவில்)

"தமிழர் விடுதலைக் கூட்டணியில் உறுப்பினராகச் சேரும் இளைஞர்களுக்குத்தான் வேலைவாய்ப்பு என்ற ஒரு தப்பபிப்பிராயம் நிலவுவதாகத் தெரியவருகிறது. அது முற்றிலும் தவறானது. வேலைவாய்ப்பு தகைமையின் அடிப்படையில் கொடுக்கப்படுமே தவிர தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களுக்கு மட்டும் அல்ல."

இவ்வாறு சாவகச்சேரி எம். பி திரு. வி. என். நவரத்தினம் நாவற்குழி, மறவன்புலவு, தனங்கிளப்பு, மட்டுவில், நுணுவில் பகுதியில் நடைபெற்ற கூட்டணிக்கிளை அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கூறினர்.

திரு. நவரத்தினம் தொடர்ந்து கூறியதாவது: ஒவ்வொரு கிளைகளிலும் இளைஞர், யுவதிகளின் பெயர்களே உறுப்பினர் பட்டியலில் ஆயிரக்கணக்கில் இருக்கின்றது. ஆனல் பெற்ருர், முதியவர்களின் பெயர்கள் மிகக்குறைவாகவே இருக்கின்றன. இதைப் பார்க்கும்போது இளைஞர் தாம் உறுப்பினராகச் சேர்ந்தால்தான் வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்ற ஒரு தப்பபிப்பிராயம் நிலவுவது தெரிகிறது. என் தொகுதியிலுள்ள சகல இளைஞர்களுக்கும் தகைமை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்குவதுதான் நீதி. அதுதான் தர்மம், என் கடமையும். நான் கடமையிலிருந்து தவறமாட்டேன் என்ருர். (உ)

## தொ. கூட்டுச்சபை —

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

வழியாக வி. எஸ். என். கே. சந்தி-ஆஸ்பத்திரி வீதி, சி. எஸ். கே. வீதி வழியாக முற்றவெளி மைதானத்தை அடையும்.

முற்றவெளி மைதானத்தில் 5-30 மணிக்கு திரு. கே. ஏ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில், தொழிற்சங்கங்களின் கூட்டுச் சபையைச் சேர்ந்த ஆர். எம். ரி. பி. இரத்நாயக்கா, அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்தைச்சேர்ந்த வே. பொன்னம்பலம், தொழில் நுட்ப ஊழியர் சங்க சம்மேளனத்தைச் சேர்ந்த பா. சடாச்சரம், லங்கா தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தைச் சேர்ந்த இ. நடராசா, சரத் முத்தெட்டுவேகம, இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தைச் சேர்ந்த சாந்தி அபயசேகரா, கே. செந்தில்வேல், இலங்கை வர்த்தகர் ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த இ. பானுதேவன், கு. பரராசசிங்கம், அரசாங்க பொதுச் சேவை தொழிற்சங்க சம்மேளனத்தைச்சேர்ந்த க நவரத்தினம், ஜே. ஏ. கே. பெரேரா, இலங்கை ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த வரசல குணரத்தின, எஸ். இராசநாயகம் ஆகியோர் பேசுவர்.

# பொலிஸ் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வந்து வவனியா மக்களுக்குக் காட்டினர். நூற்றுக்கு மேற்பட்ட தமிழர்கள் அச் சடலங்களை பார்வையிட்டனர். நானும் பார்த்தேன்.

அச்சடலங்களை தமிழர்களுக்கு காட்டிய அவர் 'அனுராதபுரத்தில் சிங்கள நாய்கள் தமிழர்களைக் கொன்றுவிட்டார்கள். நீங்கள் என்ன பார்த்துக் கொண்டு நிற்கிறீர்கள்? என்று மக்களைப் பார்த்துக் கேட்டார், இது பற்றிநான் இன்ஸ்பெக்டர் இல்வாவிடமும் ஏ. எஸ். பி யிடமும் புகார் செய்தேன். அவர்கள் எச்சரிப்பதாகக் கூறினர்கள்.

### கடை எரிந்தது

ஆகஸ்ட் 21ம் திகதி காலை நான்வீட்டில் இருந்தபோது துப்பாக்கி வெடிச் சத்தம் ஒன்று கேட்டது. எட்டிப்பார்த்தேன். சப் இன்ஸ்பெக்டர் நாதன் வெளிச் சத்தின் கீழ் நிற்கக்கண்டேன். குலசிங்கத்தின் கடை அந்நேரம் எரியக் கண்டேன் ஏ. எஸ். பி யும் பொலிசாரும் தீயை அணைத்தனர். நானும் அணைக்க உதவினேன்.

இது பற்றி புகார் செய்ய நான் வவனியா எம். பி.யின் வீட்டிற்குச் சென்றபோது அங்கு நாதனும் வேலுப்பிள்ளை என்பவரும் இருந்தனர் எம. பி. நித்திரை என்று அவர்கள் கூறினர்கள்.

### என் மனைவியைக் கிளப்பி விட்டாய்

ஒருநாள் வேலுப்பிள்ளை நாதனை நோக்கி 'நான் நாலு பிள்ளைக்காரன், நீ ஒரு பெம்பிளைக்கள்ளன். என் மனைவியைக் கிளப்பிக் கொண்டு போய்விட்டாய் பறைசக்கிலியா' என்று ஏசினர்.

இதைக் கண்ட மக்கள் பரிகசித்தனர். வேலுப்பிள்ளை எனக்கு அறிமுகமானவராகையால் அவரை நான் சமாதானப் படுத்தினேன்.

### குறுக்கு விசாரணை

சட்டத்தரணி பாரிலெட் குறுக்கு விசாரணை செய்தார். பாரிலெட்! நீர் அரசியல் தொடர்பு உள்ளவரா?

பதில்; ஆம்

நான் யூ. என். பி. ஆதரவாளன். 1977 தேர்தலில் போட்டியிட விண்ணப்பித்தேன். கிடைக்கவில்லை.

பாரிலெட்! அரசியல் கூட்டங்களில் இரகசியப் பொலிசார் குறிப்பு எடுப்பது தெரியுமா?"

பதில்: ஆம்

பாரிலெட்! அப்படியாயின் கூட்டணிக் கூட்டபேச்சுக்களையும் பொலிசார் குறிப்பு எடுத்திருப்பர் தானே?

பதில்: ஆம்

வவனியா பொலிஸ் நிலையத்தில் உள்ள கூட்ட குறிப்பேடுகளை கமிஷன் முன் சமர்ப்பிக்க வேண்டுமென்ற இக் கட்டத்தில் கமிஷனரை சட்டத்தரணி திரு. பாரிலெட் கேட்டுக் கொண்டார்.

பாரிலெட்! திருமதி மங்கையர்க்கரசி கூட்டங்களில் நீர் கூறுவது போல் பேசவில்லை என்கிறேன்

பதில்: இல்லை.

நீங்கள் உண்மையை மறைக்கப்பார்க்கிறீர்கள்.

(பார்வையாளர் மத்தியில் இக்கட்டத்தில் சிரிப்பொலி எழுந்தது.)

### வாடிகளுக்கு தீ

பீட்டர் பெர்னண்டோ என்பவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: ஆகஸ்ட் கலைவரவேலை நாங்கள் 68 வாடிகளில் 400 சிங்கள மீனவர்கள் வசித்து வந்தோம்.

ஆகஸ்ட் 18ம் திகதி காலை தமிழர்கள் எமது வாடிகளுக்கு தீவைத்தனர். 30 நிமிடங்களின்பின் துப்பாக்கிகள், பொல்லுகள், கத்திகள், சகிதம் தமிழர்கள் வாடியை நோக்கி வந்தனர்;

### கரம் துண்டிப்பு

வாடியில் வசித்த ஒரு சிங்களவரை அவர்கள் வெட்ட முற்பட்டபோது அவர் கரத்தைத் தூக்கினர். அவரது கரம் துண்டிக்கப்பட்டது.

நாம்காட்டுக்குள் ஓடி ஒளிய முனைந்தோம்.

அதற்கு முன்பதாக வழியில் நானும் என்மனைவி பிள்ளைகளும் குளத்தில் குதித்தோம்.

### யுவதி காட்டுக்குள் இழுத்தனர்

எம்மைத் தொடர்ந்து வந்த சிங்கள யுவதி ஒருவரை மூன்று தமிழர்கள் காட்டுக்குள் இழுத்துச் சென்றனர். குளத்திற்கு வெளியே நின்ற இரு தமிழர்கள் எம்மை வெளியே வருமாறு மிரட்டினர். ஒருவரிடம் துப்பாக்கி இருந்தது.

### மன்றுடினேம்

குளத்தைவிட்டு வெளியே வந்த நாம் எம்மை ஒன்றும் செய்ய வேண்டாம் என்று கும்பிட்டு மன்றுடினேம்.

எனக்கு 2 அடிபோட்டு ஓடு என்று எம்மை விரட்டினர்கள்.

### பாதுகாப்பு தந்த தமிழர்

காட்டுக்குள் ஓடமுனைந்த எமக்கு தமிழ் தோட்ட மனேஜர் ஒருவர் உதவி செய்தார். அவரது பெயர் தெரியவில்லை. அவர் எம்மை அறை ஒன்றிற்குள் பாதுகாப்பாக விட்டு துப்பாக்கிகளுடன் இரு காவல்காரர்களையும் நிற்க விட்டார்.

### கெடுக்கப் பட்டேன் என்ருர் அந்த யுவதி

பின்னர் பொலிஸ் ட்ரக்கில் நாம் ஏற்றப்பட்டோம். காட்டுக்குள் இழுத்துச் செல்லப்பட்ட சிங்கள யுவதியும் கூட்டி வரப்பட்டார்.

தம்மிடம் இருந்த காப்பு நகையை அபகரித்ததுடன் அந்த தமிழர்கள் மூவரும் தம்மைக் கற்பழித்துவிட்டதாகவும் அவர் பொலிசாருக்கு அளித்த வாக்கு மூலத்தில் தெரிவித்தார்.

## இளைஞர் பால ஸ்ரீதரன்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை 4ம் மாடிக்கு கொண்டு சென்று அங்கும் விசாரணை நடத்தினர்கள் என்றும் தெரிகின்றது.

பாலஸ்ரீதரனின் மனைவிக்குச் சுகவீனம் என்பதால் அவரது வீட்டுக்குக் கொண்டுவந்து காட்டிய பின் மீண்டும் அழைத்துச் சென்ற பின்னர் விடுதலைசெய்ததாகவும் தெரியவருகிறது.

இதேசமயம் பாரிஸுக்குச் செல்லவிருந்த இளைஞர் ஒருவரும் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகின்றது. நேற்று முன்தினம் கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து பாரிஸுக்குப் புறப்படவிருந்த இந்த இளைஞர் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளாராம்.

முருங்கனில் இரகசியப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு: பஸ்தியாம்பிள்ளை உட்பட நான்கு பொலிஸார் கொலைசெய்யப்பட்டதன் மர்மத்தைக் கண்டறிவதில் பொலிஸார் தொடர்ந்தும் தீவிர புலன்விசாரணையில் ஈடுபட்டு வருகின்றர்கள். [ம]

## தந்தைசெல்வா—

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

திரு. திவாகர் உபநிடத சுலோகங்களை சொல்லி அவற்றிற்கு ஆங்கிலத்தில் விளக்கம் அளித்தார்

கத்தோலிக்கமத சார்பில் வண பிலிப்புப் பிள்ளையும் புரட்டஸ்தாந்து சபையின் சார்பில் வண. சர்வானந்தாவும் சமய வழிபாடுகளை நடாத்தினர்கள். திருமதி கணேசன் தேவார திருவாசகங்களைப் பாடினர்,

அஞ்சலிக் கூட்டமுடிவில் திரு திவாகரும், தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர்களும் பிரமுகர்களும் சமாதிக்குச் சென்று மலர்தூவி வழிபட்டனர்.

தந்தை செல்வாவின் நினைவாலய மாதிரிக் கட்டத்தைப் பார்வையிட்ட திரு திவாகர் அதில் ஒரு மாற்றத்திற்கான ஆலோசனையைக் கூறினர். எனினும் அடிக்கடி ஏற்படுகின்ற அமைப்பு மாற்றம் அமைப்பு வேலைகளைத் தாமதப்படுத்தலாம் என்ற காரணத்தினுல் அந்த ஆலோசனை கைவிடப்பட்டதாகத் தெரிகிறது. (கா)

## சுயாட்சிக் கழகம் புரனமைக்கப்படும்

(வண்ணார்பண்ணை)

தமிழர் சுயாட்சிக்கழகத்தின் பத்தாவது ஆண்டு வருடாந்த மகாநாட்டை முன்னிட்டு மே மாதம் முதல் தொகுதிகள் தோறும் கிளைகள் புனரமைப்புக் கூட்டங்களை நடத்த கழகத்தின் நடவடிக்கைக் குழு முடிவுசெய்துள்ளது.

யாழ் மாவட்டத்திலும் வவனியா, மன்னர் மாவட்டங்களிலும் ஒருமாத காலத்தில் கிளைகளைப் புனரமைப்புச் செய்வதற்கும் புதிய கிளைகளை நிறுவுவதற்கும், தொகுதி தோறும் அமைப்பாளர்கள் நியமிக்கப்படவிருப்பதாக இக் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (அ)

## கட்டாக்காலிகள் தொல்லை

(காரைநகர்)

கவரைநகர் கிழக்குப் பகுதியில் கட்டாக்காலிகளின் தொல்லை அதிகரித்து வருவதாக செய்துகொள்ளப்பட்ட புகாரையடுத்து மேற்படி பகுதி கிராம சேவகர் திரு. க. சிறிஸ்கந்தராசா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

## கூடுதல் விவசாயக் கடன்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி வலி கிழக்கு வடக்கு கூட்டுறவுச் சங்கம் இம்முறை விவசாயிகளுக்கு 4 லட்ச ரூபாயை கடனாக வழங்கவுள்ளது. பெருந்தொகையான பணம் விவசாயிகளுக்கு கடனாக வழங்க வேண்டுமென மக்கள் வங்கிக்கு கோப்பாய் எம். பி. சிபார்சு வழங்கியதையொட்டி இக் கடனுதவி வழங்கப்படவிருக்கிறதாம். [கெ-உ]

## யாருடையது?

சுன்னாகம் கந்தரோடைவீதியில் ரி. தர்மகுலசிங்கம் என்பவரால் கண்டெடுக்கப்பட்ட மோட்டார்வாகனச் சாரதி லைசென்ஸ் ஒன்று 'ஈழநாடு' காரியலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்வந்து பெற்றுக் கொள்ளலாம்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் க்கு தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லிவீதி மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

The Eelanaadu P. O. Box 49, Jaffna. Telegram "Eenaadu" Telephone 389. Registered as a Newspaper in SriLanka.